ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு

உ

திருப்பூவணம் கந்தசாமிப் புலவர்
இயற்றிய

திருப்பூவண நாதருலா

இது
மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
நூதனமாக எழுதிய அரும்பதவுரை முதலியவற்றுடன்

சென்னை
கபீர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

1956

நான்காம் பதிப்பு

புதிய விலை ரூ. 1.00

[விலை ~~அணா 10~~

O-1I4LKY,T
N56
78617

78617

உ

இப்புத்தகத்திலடங்கியவை

1. இந்நூல் அரும்பதவுரை முதலியவற்றில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்புக்கள்
2. முகவுரை
3. நூலாசிரியர் வரலாறு
4. திருப்பூவணநாதருலா மூலமும் அரும்பதவுரையும்

O-,14LKY,T
N56

அரும்பதவுரை முதலியவற்றில் எடுத்துக்காட்டிய

நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்புக்கள்

அருணைக் - அருணைக்கலம்பகம்
ஏகாம்பர - ஏகாம்பரநாதருலா
கந்த - கந்தபுராணம்
காசிக் - காசிக்கலம்பகம்
காஞ்சிப் - காஞ்சிப்புராணம்
சிதம்பரச்செய் - சிதம்பரச்செய்யுட்கோவை
சிலப் - சிலப்பதிகாரம்
சீவக - சீவகசிந்தாமணி
சுந்தர - சுந்தரமூர்த்திநாயனுர்
செய் - செய்யுள்
செவ்வந்திப் - செவ்வந்திப்புராணம்
தமிழ்நா - தமிழ்நாவலர் சரிதை
திருக்குற்ருலப் - திருக்குற்ருலப்புராணம்
திருஞான - திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்; திருஞான சம்பந்தமூர்த்திநாயனுர்புராணம்
திருநா - திருநாவுக்கரசுநாயனுர்
திருப்பூவணப் - திருப்பூவணப்புராணம்
திருவாலவாய் - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிடை - திருவிடைமருதூருலா
திருவிடை. மும்மணி - திருவிடைமருதூர் மும்மணிக் கோவை
திருவிளை - திருவிளையாடல்
திருவெங்கை - திருவெங்கையுலா
தே - தேவாரம்
பதி - பதிகம்
பிரபுலிங்க - பிரபுலிங்கலீலை
பெரிய - பெரியபுராணம்
மணி - மணிமேகலை
முத்துக் - முத்துக்குமாரசாமிபிள்ளைத்தமிழ்

உ

கணபதி துணை

இரண்டாம் பதிப்பின் முகவுரை

திருவாசகம்

" பூவண மதனிற் பொலிந்தினி தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும் "

திருவிளையாடல்

" பருங்கை மால்வரைப் பூழியன் பைந்தமிழ் நாட்டில்
இரங்கு தெண்டிரைக் கரங்களா லீர்ம்புனல் வையை
மருங்கி னந்தன மலர்ந்தபன் மலர்கடுய்ப் பணியப்
புரங்க டந்தவ னிருப்பது பூவண நகரம் "

திருப்பூவணநாதருலாவென்பது திருப்பூவணத்திலே கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான்மீது கவிஞர்பெருமானுகிய திருப் பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றியது; இதிலுள்ள கண்ணிகள் 469.

திருப்பூவணமென்பது பாண்டிநாட்டுள்ள தேவாரம்பெற்ற சிவ ஸ்தலங்கள் பதினுன்கனுள் ஒன்று; இதற்குரிய தேவாரப்பதிகம் - 4 (திருஞான. 2; திருநா. க; சுந்தர. 1); கருவூர்த்தேவர் திருவிசைப்பா - 1. இதற்கு வடமொழி தென்மொழி இரண்டிலும் புராணங்கள் உள்ளன.

ஸ்தல விநாயகர்கள் : கற்பகவிநாயகர், மணிமந்திரவிநாயகர், ஒட்டுக்கல் வெள்ளைவிநாயகர்.

ஸ்வாமியின் திருநாமங்கள் : புஷ்பவனநாதர், பாஸ்கரபுரீசர், பிதிர்மோக்ஷபுரீசர், பிரஹ்மபுரீசர், ரகஸ்யசிதம்பரேசர், திருப்பூவணே சர், அடைவார்வினைதீர்ப்பவரென்பன ; ஸந்நிதி கிழக்கு.

அம்பிகையின் திருநாமங்கள் : சுந்தரநாயகி, தடிதம்பை, ஸுவர்ணவல்லி, அன்னபூரணி, அழகியநாயகி, அழகியமின், மின்னனை யாள், மின்னம்மை, மின்னுளென்பன. அம்பிகையின் திருக்கோயில் ஸ்வாமியின் திருக்கோயிலுக்கு வலப்பக்கத்துள்ளது.

நாயகர் திருநாமங்கள் : ஸௌந்தர நாயகர், அழகியநாயகர், அழ குக்கு ஆருமொவ்வாதவரென்பன ; பொன்னனையாளுடைய நகத்தழும் பைப் பெற்றருளியவர் இவரே ; அத்தழும்பை இன்றும் காணலாகும்.

ஸ்தலத்தின் திருநாமங்கள் : புஷ்பவனம், புஷ்பவனகாசி, புஷ்ப புரம், பாஸ்கரக்ஷேத்திரம், பிதிர்மோக்ஷபுரி, பிரஹ்மபுரி, ரகஸ்யசிதம் பரம், திருப்பூவணம், திருப்பூவணக்காசியென்பன ; பூவையெனவும் திருப்புவனமெனவும் இதன் பெயர் வழங்கும்.

தீர்த்தங்கள் : வையை, மணிகர்ணிகை, அல்லது மணிகுண்டம், தேவிகுண்டம், பாபநாசம், பிரஹ்மதீர்த்தம், லக்ஷ்மிதீர்த்தம், மார்க் கண்டேயதீர்த்தம், நளதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், வஸிஷ்டதீர்த்தம் முதலியன.

ஸ்தலவிருக்ஷம் : பலா.

வழிபட்டுப்பேறுபெற்றோர்கள்: விநாயகர், உமாதேவியார், திருமால், திருமகள், பிரஹ்மதேவர், அகஸ்தியர், காளி, சூரியன், திருணசனர், தருமனுர், ஸுஜ்ஜோதிமஹாராஜா, மார்க்கண்டேயர், வஸிஷ்டர், இந்திரன், சந்திரன், நளன், சாகாசனர், பொன்னனையாள் முதலியோர்கள்.

இந்தஸ்தலத்தில் என்பானது மலர் அல்லது சிலையாகுமென்பது ஐதிஹ்யம். வையைநதியிலுள்ள மணல்கள் சிவலிங்கங்களாகத் தமக்குத் தோற்றினமையின், அவற்றை மிதித்தற்கஞ்சித் தரிசித்தற்கு அக்கரையிலேயே நின்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் முதலியோர்கள்பொருட்டுச் சிவபெருமான் திருநந்திதேவரைச் சிறிது சாய்ந்திருக்கும்படி கட்டளையிட, அவர் அப்படியே சாய்ந்திருந்தனரென்று பெரியோர் சொல்லுகின்றனர்; அந்தத் தோற்றத்தை இன்றும் காணலாகும். இதனை, "செப்பு மூவர்சொற் றமிழ்த்துதிக்க விருப்பொடு வந்துவையை மணற்சிவ லிங்கமென மனத்தெணிமுன் புவட கரைக்கவர் நின்றுதமிழ் பாடுபொழு தேயிடப மாமுதுகு சாயும் வகை யேசெய்து முன் மூவர் தரிசிக்கமகிழ் நேசர்" (**புட்பவனநாதர் வண்ணம்**) என்பதனுலுமுணர்க. **பொன்னனையாள்மடமென்றும், பொன்னனையாள் மண்டபம்** என்றும் இரண்டு கட்டிடங்கள் இத்தலத்தில் உள்ளன; அவற்றுள் முன்னது பொன்னனையாள் சிவனடியார்களை அமுது செய்வித்த இடமென்றும் பின்னது அவள்பொருட்டு மதுரைச் சோமசுந்தரக்கடவுள் வந்து ரஸவாதம் செய்தருளிய இடமென்றும் சொல்லுகின்றனர். கோரக்கஸித்தருடைய ஆலயமொன்று இத்தலத்தில் இருக்கின்றது. இதுநிற்க.

உலாவென்பது தமிழிலுள்ள பலவகைப்பிரபந்தங்களுள் ஒருவகை நூல்; ஒருதலைவன் பேதை முதற் பேரிளம்பெண் ஈருகிய ஏழுபருவ மாதர்களும் தன்னைக்கண்டு காதல்கூர வீதியிற் பவனிபோந்தானென்று கலிவெண்பாவாற் கூறப்படவேண்டுமென்பது இந்நூலுக்குரியவிதி. இங்கே பாட்டுடைத்தலைவர் திருப்பூவணநாதர்; மாதர்களென்றது உருத்திர கணிகையரை; ஏழுபருவங்களாவன: (ஐந்தாம் ஆண்டுமுதல் ஏழாம் ஆண்டளவும்) பேதை; (8 - 11) பெதும்பை; (12 - 3) மங்கை; (14 - 9) மடந்தை; (20 - 25) அரிவை; (26 - 31) தெரிவை; (32 - 40) பேரிளம் பெண். இவற்றுள் ஒவ்வொரு பருவத்தையும் வேறுபடுத்தி வருணிப்பது முதலியன கஷ்டமாகவிருந்தாலும் பெதும்பைப்பருவத்தை வருணித்தல் மிகவும் கஷ்டமென்பர்; "பேசு முலாவிற் பெதும்பைபுலி" என்பது ஔவையார் திருவாக்கு.

இந்தவுலா திருப்பூவை யுலாவெனவும் வழங்கும்.

திருப்பூவணத்தலவிசேடங்களும் பிறசிவஸ்தலங்களின் விசேடங்கள் முதலியனவும், நாயன்மார்கள் மற்றச்சிவநேசர்களுடைய அருமைச் செயல்களும் பழைய தமிழ்நூல்களின் அருமைப்பிரயோகங்களும் இந்நூலில் ஆங்காங்குக் காணப்படுவதன்றி, அக்காலத்திருந்த சிவகங்கை அரசராகிய **முத்துவடுக நாததுரையவர்களின்** சிவநேசமும் திருக்**கண்ணதேவர், பூவணலிங்கம்பிள்ளை, ஈசுவர மூர்த்தியாபிள்ளை** என்பவர்கள் இத்தலத்தில் இன்ன இன்ன திருப்பணிகள் செய்தார்களென்பதும் அறியலாகும்; இந்நூலில், 46, 97, 100, 104-ஆம் கண்ணிகளைப் பார்க்க.

37 - வருடங்களுக்குமுன், மேலகரம் **ஸ்ரீ திரிகூடராசப்பக் கவிராயரவர்கள்** திருநெல்வேலியில் இந்நூல் ஏட்டுப்பிரதியொன்று கொடுத்தார்கள்; ஷ பிரதியில் முதற்பகுதி இல்லை; பெதும்பைப்பருவமுதலிய

பாகமேயிருந்தது; நடையின் இனிமையைநோக்கி முற்றும் படித்துப் பார்க்க விரும்பி மதுரை முதலிய இடங்களிற் பலமுறை முயன்றும் பிரதி கிடைக்கவில்லை; அப்பால் மதுரையில் ஸேதுபதி ஹைஸ்கூலில் உபாத்தியாயராக இருந்த அரியூர் ஸ்ரீ. எஸ். சாமிநாதையரவர்கள் மிக முயன்று பிரமனூர் ம-ா-ா-ஸ்ரீ வில்லியப்பப்பிள்ளையவர்களிட மிருந்து முழுவதுமுள்ள ஏட்டுப் பிரதியொன்றை வாங்கி அனுப்பி னூர்கள். இந்நூற்பரிசோதனைக்குக் கிடைத்தவை இந்த இரண்டுமே.

இந்நூலிலிருந்த சில ஐயங்களை நீக்கியவர்கள் திருப்பூவணம் பிரஹ்மஸ்ரீ வெங்குசாஸ்திரிகள் முதலியோர்கள்.

அடிமடக்குகளிலும் சிலேடைகளிலும் பேதமில்லாமல் நகர னகரங்களும், எதுகைகளிற் பன்மைவரவேண்டியவிடத்து ஒருமையும் ஒருமை வரவேண்டியவிடத்துப் பன்மையும் இந்நூலுட் சிலவிடத்து வந்திருக்கின்றன; மாற்றக்கூடாமையால் அவை உள்ளவாறே பதிப்பிக்கப் பட்டன.

இந்நூலுள் ஒவ்வொரு கண்ணியும் நயமாக இருப்பினும் பின்னர்ச் சுட்டியவைகள் மிகப்பாராட்டற்பாலன :—

திருத்தேருடன் வருவோர் 83 - 128; குழாத்தினர்கூற்று 142 - 56; பேதைவருணனை 158 - 74; கைத்தாய் பேதையைக் கற்பித்தல் முதலியன 181 - 91; திருப்பூவணநாதரைத் தெய்வப்பலாப்பழமென்று கூறும் சிலேடை 195 - 202; ஞானசம்பந்தர் முதலியோரைக் கூறுதல் 224 - 30; ஸ்வாமியின் கபோலத்தழும்பைப்பாராட்டல் 236 - 40; மங்கையைப் புட்பவனமென்றல் 252 - 7; சொல்லின்பம் 285 - 93; பாண்டிநாட்டுள்ள 14 - தலங்கள் 298 - 311; அரிவை தன் துயரைப்போக்கிக் கொள்ள முயன்றமை 355 - 9; தெரிவை, பொன்னனையாளுடைய நித்த நியமமுதலியவற்றைச் சித்திரத்தில் முறையே பார்த்து உவத்தல் 377 - 99; தெரிவை ஸ்வாமியைத்தரிசித்தலும் கூறுதலும் 408 - 19; பேரிளம் பெண் துதித்தலும், தன்னைக் கொன்றையாகக் கூறுதலும் 458 - 64.

இந்நூல் முதலில் 1904-ஆம் வருஷத்தில் பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்பில், அரும்பதவுரை முதலியன அப்பதிப்பைக் காட்டிலும் பெருக்கத்தை யடைந்திருப்பதோடு படிப்பவர்களுக்கு உபயோகமாக இருத்தலைக் கருதி அவை மூலமுள்ள பக்கங்களில் அடிக்குறிப்பாக இப்போது அமைக்கப்பெற்றுள்ளன.

இங்ஙனம்

சென்னை
7–5–1923

வே. சாமிநாதையன்.

குறிப்பு: இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1923-ஆம் ஆண்டு எனது பாட்டனாராகிய டாக்டர் ஐயரவர்களாலும், மூன்றும் பதிப்பு 1944-ஆம் ஆண்டு எனது தந்தையாராகிய ஸ்ரீ கலியாணசுந்தரையரவர்களாலும் வெளியிடப்பெற்றன. இந்நூலைப்பற்றிய விரிவான செய்திகள் மேலேயுள்ள முகவுரையால் நன்கு விளங்குமாதலால் நான் வேறு எழுதுவது மிகையாகும். இது சென்னை சர்வகலாசாலையாரால் வித்துவான் பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது. அவர்கள் திறத்து மிக்க நன்றியறிவுடையேன்.

சென்னை–5
26–5–1956

க. சுப்பிரமணியன்.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியராக கந்தசாமிப் புலவருடைய ஊர் திருப்பூவணமே; இது "கனியினைப் பிழிந்துசெந்தேன் கண்டென வாப்ப னூர்நம், பனி மதி மிலைந்த நாதன் பன்னரும் புராணந் தன்னைப், புனிதன்மெய்க் கந்த சாமிக் கவிஞன்பூ வணத்தான் பார்மேல், இனிதெனப் புலவர் கூற வின் றமிழ்ப் புணர்த்தி னனே" (திருவாப்பனூர்ப் புராணம், பாயிரம் 3) என்பதனாலும், திருப்பூவணம், கந்தசாமிப் புலவரென்ற வழக்கத்தாலும் விளங்குகின்றது. திருப்பூவணத்திலிருந்த ஓர் உருத்திரகணிகையின் புத்திரராக இவர் கூறப்படுவர்; இது, "திருவாலவாயர்" (50-ஆம் பக்கம்) என்னும் இந்நூற்சிறப்புப்பாயிரச் செய்யுளில், 'பொன்னனை யாள் பெற்றெடுத்த புத்திரனேர் கந்தசாமி' எனக் கூறப்பட்டிருத்தலா லும், பொன்னனையாளை, 'எம், பொன்னனையாள்' (52 - 3 - ஆம் கண்ணி) என இவ்வுலாவில் இவரே பாடியிருத்தலாலும், கர்ணபரம்ப ரைக்கேள்விகளாலும் விளங்குகின்றது. இவ்வுலாவில் 'மன்போசன் முத்து வடுகநா தேந்த்ரனருள், பொன்போலு மாடைபுனைந்தருளி' (46) என்பதனால், இவர் சிவகங்கை அரசராக இருந்த முத்து வடுகநாததுரை யவர்களின் காலத்தவராக எண்ணப்படுகிறார். அக்காலம் சற்றேறக் குறைய * 150 வருடங்களுக்கு முற்பட்டிருக்கலாமென்று தெரிகின்றது. திருப்பூவணப்புராணம், பாயிரம், 3-ஆம் செய்யுளிற் கூறப்பட்டிருக்குங் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 300 வருடங்களுக்கு முந்தியதாகின்ற மையாலும் ஷ புராண ஏட்டுப் பிரதிகளில் அந்நூல் இவர் செய்ததாக எழுதப்படாமையாலும் செய்யுட்களின் நடை வேறுபாட்டினாலும் அந்தக் காலத்தை இவருடைய காலமாகச்சொல்லக்கூடவில்லை. இவ்வுலாவும் திரு வாப்பானூர்ப்புராணமும் இவரியற்றியநூல்களென்று சிறப்புப்பாயிரங் களால் நிச்சயமாகத் தெரிகின்றன. புட்பவனநாதர்வண்ணமும், திருப்பூ வண ஸ்தலவகுப்பு தீர்த்தவகுப்பு மூர்த்திவகுப்பு என்பவைகளும், திருப் புனவாயிற்புராணமும் இவராற் செய்யப்பட்டனவென்று சொல்லுகின் றனர். இவரியற்றிய செய்யுட்களை ஆழ்ந்துபார்க்கையில் தேவாரமுதலிய வற்றிலும் சைவ புராணங்களிலும் பழைய செய்யுட்கள் முதலிய வற்றிலும் இவர் ஒழுங்கான பயிற்சியுள்ளவரென்றும், தமிழ்ப்பாஷை யில் மிக்க அன்புடையவரென்றும், சிவபக்தி அடியார்பக்தி வாய்ந்தவ ரென்றும் தெரியவரும். மேலேகாட்டிய, "கனியினைப் பிழிந்து" என்னுஞ்செய்யுளால், இவருடையவாக்கு அக்காலத்திலேயே இன்னவண் ணம் மதிக்கப்பெற்றுவந்ததென்பது விளங்குதலின், அதன் அருமை யைப்பற்றி ஈண்டு எழுதுவது மிகையாகும்.

வெண்பா

பூவணத்தெம் புண்ணியன்முன் பொன்னனையா ளுக்காக்கொள்
தூவணத்த பொன்மேனிச் சுந்தரன்மேற்—பாவணத்த
கந்தசா மிப்பேர்க் கவிஞனன்பிற் செய்யிந்நூற்
கெந்தநூ லாகு மிணை.

---

* முத்துவடுகநாததுரையவர்களின் காலத்தை விளங்கத்தெரிந்து கொள்ளுதற்குத் தக்க சாதனம் இப்பொழுது கிடைக்கவில்லை.

உ

கணபதி துணை

திருப்பூவண நாதருலா

காப்பு

சேவையுலாக் கொண்ட திருப்பூ வணர்மேல்வெண்
பாவையுலாம் பூவையுலாப் பாடவே - கோவைச்
சிரத்தந்தத் தந்திவண்ணன் செம்மலென வந்த
கரத்தந்தத் தந்திவண்ணன் காப்பு.

நூல்

பொன்பூத்த வுந்திப் பொலந்தா மரையாற்கும்
மன்பூத்த கஞ்ச மறையவற்கும் - மின்பூத்த 1

இந்திரற்குந் தேவர்க்கு மியாவர்க்கு மாதவர்க்கும்
சந்திரற்குஞ் சூரியர்க்குந் தம்பிரான் - அந்தமிலாப் 2

பல்கோடி யண்டம் படைப்போன் பரிப்போனப்
பல்கோடி யண்டம் பரந்தழிப்போன் - பல்கோடி 3

நாரணரு நான்முகரு நாளற் றழியினுந்தன்
காரண நேத்திரத்தாற் கண்டிருப்போன் - ஆரணஞ்சொல் 4

எல்லாப் பொருளு மிதுபொருளென் றோர்பொருண்மேல்
இல்லாப் பொருளு மியானென்போன் - எல்லா நீ 5

(காப்பு) சேவை - இடபத்தை. வெண்பாவை - ஸரஸ்வதீதேவி. உலாம் - உலாவும். பூவை - திருப்பூவணம். சிரம் தந்தத்துக் கோவை அந்திவண்ணன்; சிரம் தந்தம் ஆகிய இவற்றைக்கோத்த மாலையை யுடைய அந்திவண்ணன்; பரமசிவன். தந்தம் - பன்றிக்கொம்பு. கரத்து அந்தம் தந்தி - துதிக்கையால் அழகுபெற்ற விநாயகக்கடவுள்; வள் நல் காப்பு - வளவிய நல்ல காப்பாவர்.

1. உந்தித்தாமரையான் - திருமால்.

2. தம்பிரான் - தலைவன். 3. பரிப்போன் - காப்பவர்.

4. சூரியன் சந்திரன் அக்கினியென்னும் முச்சுடர்களுக்கும் இறைவன் திருவிழிகள் காரணமாக இருத்தல்பற்றி, 'காரணநேத்திரம்' என்றார்.

5. மேல் - தமக்குமேல்.

தலவிசேடம்

என்னனை யாரிடத்தி லென்றுமிரான் மின்னனையாம்
என்னனை யாரிடத்தி லேயிருப்போன் - முன்னர் 6
இமகிரிக் கெய்திமண ந் தெம்பெரு மாட்டி
உமைதழுவச் சின்னு ளுறைந்து - சிமையக் 7
கயிலைமலைக் கெய்தியங்குக் காமுற் றுறைநாள்
குயிலை மலைக்கரசன் கொம்பைப் - பயில்வொரீஇ 8
ஈசன் வெகுளவுமை யேதென்ன நீதக்கன்
நாசமகம் பார்க்க நடந்தநாட் - பேசியவெம் 9
வார்த்தை யவமதித்தாய் மாதே யறிந்துசெயும்
ஆர்த்தகொடும் பாவமீ தாகையால் - தீர்த்தலரி 10
தெற்குரியை யல்லைநீ யேகுழியே கென்னவுமை
தற்குரிய நாதனிரு தாடுதிப்ப - நற்கருணை 11
வள்ள றிருவாய் மலர்ந்தருளிப் பாண்டிநாட்
டுள்ளநுகர் பூவணமென் றூர்தலமுண் - டொள்ளிழையே 12
அத்தலத்தி லல்லா லறிந்து செயும்பாவம்
எத்தலத்துந் தீராதங் கேகென்னக் - கைத்தலத்தால் 13
ஈசனைப் போற்றி யெழுந்தருளித் தென்றிசையில்
வாசமலி புட்ப வனத்தெய்தித் - தேசுவளர் 14
செம்பொற் றருவொன்று செங்கையால் வைத்துவளர்த்
தம்பொற் றருவி னடிநீழற் - கொம்பர் 15

---

6. என்ன னையார். மின்னனையாம் என் அன்னையார்; மின்னனை யாரென்பது இத்தலத்தில் அம்பிகையின் திருநாமம். இங்கே ஸ்வாமியின் திருக்கோயில் அம்பிகையின் திருக்கோயிலுக்கு இடப்பக்கத்தேயுள்ள தென்பது அறிதற்பாலது.

7. இமகிரி - இமயமலை.

8. குயிலை - குயில்மொழிபோன்ற மொழியையுடைய உமாதேவி யாரை. பயில்வு ஒரீஇ - சேர்ந்து பழகுதலினின்றும் நீங்கி.

9. ஏது என்ன - வெகுளுதற்குக் காரணம் யாதென்று வினவ. தக்கனுடைய மகம். நீ நடந்த நாளில்.

9 - 10. வார்த்தை - செல்லவேண்டாமென்றது. ஆர்த்த - நிரப்பிய. அறிந்துசெயும் பாவம் - ஞானகிருதம் (13). தீர்த்தல் அரிது.

11. எற்கு - எனக்கு. தற்கு - தனக்கு.

13. என்ன - என்றுகட்டளையிட. 14. புட்பவனம் - திருப்பூவணம்.

15. செம்பொற்றரு - பாரிசாதம். கொம்பர் - உமாதேவியார்.

தெருளார் பெருந்தவமுன் செய்ய வெளிப்பட்
டருளே திருமேனி யானேன் - பிரியா 16

ஒருபதம் வேண்டிமணி யோடைகண்ட வெய்யோற்
கிருபதங் காட்டியரு ளீந்தோன் - பெரியசத 17

பத்திர வேதனைமுன் பற்றி வருஞ்சாபம்
அத்திர மாக வருள்செய்தோன் - மெத்தத் 18

தருக்குதிரு ணுசனனூர் தம்மருக்க ராக
அரக்க வுருவொழித்த வம்மான் - புரக்கும் 19

உருமே னிவந்தமா யோனைத் தவஞ்செய்
திருமேனி தீண்டவருள் செய்தோன் - கருமேனி 20

மாமுகவ ரர்ச்சிக்க வானோர்க்கு மேனோர்க்கும்
தாமுதன்மை யாகுந் தலையளித்தோன் - காமர் 21

---

16. தெருள் - தெளிவு.

17. ஒருபதம் - துர்வாஸமுனிவருடைய சாபத்தால் நீங்கிய தன் பதவியை. மணியோடை - மணிகர்ணிகாதீர்த்தம். வெய்யோன் - சூரியன். இருபதம் - இரண்டுதிருவடிகளை ; ஒருபதம் வேண்டியவனுக்கு இருபதங்கொடுத்தருளினரென்பது மற்றொருபொருள்.

17 - 8. சதபத்திரம் - தாமரைமலர் ; நூறு இதழையுடையது. சாபம் - பிரமதேவர் தம் சந்நிதியில் ஊர்வசியை விரும்பினமையால், 'இனி நீ நம்முன்னர் நிற்றற்கு உரியையல்லை' எனச் சிவபெருமான் அவருக்குக் கொடுத்தருளியசாபம். அத்திரமாக - நிலையில்லாததாக ; சாபம் அத்திரமாக - வில்லானது அஸ்திரமாகவென்பது மற்றொரு பொருள்.

19. திருணுசனனூர் - புல்லை உணவாகவுடையவர் ; இவர் ஒரு முனிவர். அருக்கராகம் - சூரியன்போன்ற செம்மைநிறம். கௌதமிநதிக் கரையிலுள்ள திரணுசனரென்னும் பிராமணரொருவர் ஸ்தலயாத்திரை செய்பவராகி இத்தலம்வந்து அம்பிகையைமட்டும் தரிசித்து ஸ்வாமியைத் தரிசியாமற் சென்ற பாவத்தால், ராக்ஷஸ வடிவம்பெற்றுத் துன்புற்று நாரதமுனிவருடைய கட்டளையின்படி இத்தலத்துள்ள பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அவ்வுருவம் நீங்கப்பெற்று விதிப்படி தரிசித்து முத்தி பெற்றனர்.

20. உரு மேல் நிவந்த - உருவம் மேலே உயரப்பெற்ற ; உலகளந்த நிலையைக் கூறியபடி. திரு மேனிதீண்ட - திருமகள்மேனியைத் தீண்டும் படி. வாலகில்லியமுனிவர்களை அவமதித்த குற்றத்தால் திருமாலைப் பிரிந்த திருமகளார் இங்கேவந்து தவஞ்செய்து அப்பால் திருமாலால் அங்கீகரிக்கப்பெற்றனர்.

21. மாமுகவர் - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் ; இவ ருடைய திருநாமம் மணிமந்திரவிநாயகரென்பது.

செழுந்தமிழ் மாமுனிவன் றெண்கடனீ ரெல்லாம்
உழுந்தமிழ்நீ ராக்க வுவந்தோன் - தொழுந்தருமன் 22
காளிசுச் சோதிகன்மார்க் கண்டன் வசிட்டனிந்த்ரன்
வாளிமக ரன்பூசை வாஞ்சித்தோன் - தோளில் 23
தழைக்கும் படிகொணள சக்ரவர்த்தி முன்பட்
டுழைக்குங் கலிதீர்த் துவந்தோன் - மழைக்குள் 24
ஒருநாட் பகுந்துண்ட வுப்பிலாக் கீரைக்
கருமாப் பதவி யளித்தோன் - விரிநீர்ச்செம் 25
போதத் திருவுருவாம் பொன்னனை யாட்கிரத
வாதத் திருவுருவா வந்துதித்தோன் - கோதிலறப் 26
பைங்கூழ் வளர்த்த பசும்பாதி செங்கையான்
மங்கா தமைக்க வளர்ந்ததருத் - துங்கமார் 27
ஒருகத்தி லேதருவா யோருகத்தில் வில்லுவமாய்
ஒருகத்தில் வன்னியா யோருகத்திற் - சீருற்ற 28

---

22. இத்தலத்துள்ள மணிகர்ணிகா தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த விசேடத்தால், அகத்தியமுனிவர் கடனீரையுண்டருளினர். (திருப்பூவணப். சூரியன்பூ. 61). தருமன் - தருமஞ்ஞனென்னும் பிராமணன்.

23. சுச்சோதிகன் - கோதாவரிநதிக்கரைக் கண்ணதாகிய போகவதி நகரத்தரசனுன தேவவன்மாவென்னும் அரசன் புத்திரன். இவன் நாரதமுனிவர் கட்டளைப்படி இத்தலம் வந்து ஸ்வாமிதரிசனம் பண்ணி மணிகர்ணிகையில் திலதருப்பணுதிகளைச்செய்து பிதிரர்களை முத்தியடைவித்தான். வாள் - ஒளி. இமகரன் - பனியை உண்டுபண்ணுபவன்; சந்திரன். காளிமுதலியோர் இத்தலத்திற்பூசித்தோர்.

23 - 4. படி - பூமி; தோளிற்படியைத்தாங்கிய நளன். கலி - கலிபுருடனுலாகிய துன்பத்தை; "வெம்மைக் கலிதீர்த்த மேனுணளன்றந்த, செம்மைப் பதக்கமுரஞ் சேர்வித்து" என்பர்பின்; 54.

25. இத்தலத்தில் உடலைவெறுத்து உப்பில்லாத இலைக்கறியை மாத்திரமுண்டு சிவயோகஞ் செய்துகொண்டிருந்த ஓர் அந்தணன் ஒரு நாளிரவிற் பெருமழை பெய்யுங்காலத்தில் மிக்கபசியோடுவந்த ஒரு பிராமணனுக்குத் தனக்குப் பாகஞ்செய்துவைத்திருந்த இலைக்கறியை அளித்து அவனையுண்பித்து அப்புண்ணியத்தால் வீடுபேற்றை யடைந்தான் (திருப்பூவணப். உமைவரு. 25 - 33)

26. போதத்திருவுரு - ஞானவடிவம். இரத வாதம் - ரஸவாதம். திருப்பூவணநாதர் பொன்னனையாளென்னும் உருத்திர கணிகைக்கு இரும்பு முதலியவற்றைப் பொன்னுக்கித் திருவுருவங்கொண்டருளிய வரலாறு, திருவிளையாடல் இரதவாதஞ்செய்த படலத்தாலும், இந்நூல் 375-ஆம் கண்ணி முதலியவற்ருலும் அறியலாகும்.

26 - 9. அறப்பைங்கூழ் - முப்பத்திரண்டு தருமங்களாகிய செவ்விய பயிர்கள். பசும்பாதி - உமாதேவியார். உமாதேவியார் முப்பத்திரண்டு

பாரிற் கடவுட் பலாவாய்த் தழைக்கவதன்
வேரிற் கிளைத்தமுதல் விண்ணவர்கோன் - நேரா 29

அடிமடக்கு

மதித்த கயிலை வரையா னடக்க
மதித்த கயிலை வரையான் - துதித்தார்க்கு 30
வாய்த்திடத்தா னீபவனத்தினு னுன்மறைசொல்
வாய்த்திடத்தா னீப வனத்தினுன் - சாத்தியகை 31
நந்த நிறைவிருத்த னுகத்தான் வீற்றிருந்தா
னந்த நிறைவிருத்த னுகத்தான் - முந்தரங்க 32
ஊரவரம் பெற்றமா யூரத்தான் கண்டோன்மீ
தூரவரம் பெற்றமா யூரத்தான் - தேரிற் 33

தருமங்களையும் வளர்த்தருளினமையின், 'கோதிலறப் பைங்கூழ் வளர்த்த பசும்பாதி' என்றார்; இதனைக் காஞ்சிப்புராணம், முதற் காண்டம், தழுவக்குழைந்த படலம், 137-ஆம் செய்யுள் முதலியவற்றாலும், ஷை புராணம், 2-ஆம் காண்டம், கழுவாய்ப்படலம், 238-ஆம் செய்யுள் முதலியவற்றாலுமுணர்க. தருவென்னும் எழுவாய், 'தழைக்க' (29) என்பதைக்கொள்ளும். பயிரைவளர்த்தோர் தருவையும் வளர்த்தற்குரிய ரென்றபடி. முதல் - முதற்பொருள். உமாதேவியாருடைய திருக்கரத் தால் வைக்கப்பெற்ற விருக்ஷம் கிருதயுகமுதலிய நான்கிலும் முறையே பாரிசாதம், வில்லுவம், வன்னி, பலாவாக ஆயிற்றென்பதை, "முதுசுவை தருமா ரமுதவிந் துவிற்றுன் முளைத்திடுஞ் சுரர்தருவொன்று, துதிபெறு கிரேதா யுகமது முன்னுச் சொற்றகு நான்குகந்தொறுமிப், பதிதனிற் பாரி சாதமா லூரம் பன்னரு முயர்புகழ் வன்னி, திதமுறு செம்பொற் சுளைக்குடக் கனிசேர் தீம்பலா வாகியே திகழும்" (திருப்பூவணப். சிதம்பரவுப. 12) என்பதனாலுமுணர்க.

29 - 30. நேரா - உடன்படாத. மதித்தகை இல் யான் ஐவரை அடக்க மதித்த - புத்திகூர்மையில்லாத யான் ஐம்பொறிகளாகிய துஷ்டரை அடக்கும்படி திருவுளம்பற்றின.

31. வாய்த்திடத் தான் ஈ பவனத்தினுன் - வாய்த்திடும்படி தான் ஈயும் பவனத்தினுன்; பவனம் - தேவருலகம். நான்மறை சொல் வாய்த் திடத்தான் - நான்குவேதங்களையும் சொல்லும் வாய்வன்மையை யுடையவர். நீபவனம் - கடம்பவனம்; மதுரை.

31 - 2. கைசாத்திய நந்தன் இறை விருத்தனுக - கையில் சங்கத்தை யணிந்த திருமால் பிரமதேவருடைய விரோதியாக; விருத்தம்: வட மொழி. இறை - பிரமதேவர். வீற்றிருத்தல் - கவலையின்றியிருத்தல். நந்தல்நிறை - பெருகுதல் நிறைந்த. விருத்த நாகம் - விருத்தாசலம்; பழமலை.

32 - 3. முந்து அரங்க ஊரவர் அம் பெற்றமாய் ஊரத் தான் கண் டோன் - முன்பு திருவரங்கத்தையுடையவராகிய திருமால், அழகிய இடப மாய்வரும்வண்ணம் தாம் செய்தருளியவர். மீது ஊர வரம்பெற்ற மாயூரத்

படங்கொண்ட வல்குற் பராபரைமின் னம்மை
இடங்கொண் டுறைபூவ ணேசன் - நடங்கொண்டு 34

சேவிக்குந் தெய்வத் திருப்பங் குனித்திருநாள்
மேவப் பெருமகிழ்ச்சி மீதூரக் - காவற் 35

குருமணிவெள் ளேற்றுக் கொடியேற்றி வீதித்
திருவுலாப் போதுந் தினத்துள் - ஒருநாள் 36

சகங்காட்டுங் கங்கு றணிய வருணன்
முகங்காட்டச் சங்க முழங்கச் - சுகங்காட்டும் 37

பொன்மலை வல்லியுடன் பூண்ட திருத்துயினீத்
தென்மலை வில்லி யெழுந்தருளி - நன்மைப் 38

பருவயிர மாணிக்கப் பல்லக்கின் மீது
திருவனந்தற் றெய்வவுலாச் சென்று - பெரிதிருந்து 39

தேறத் தகும்பெரிய திவ்யா கமப்படியே
கூறத் தகும்பூசை கொண்டதற்பின் - மாறற்ற 40

நீணித் திலத்தரள நீல ப்ரவாளவச்ர
மாணிக்கச் சித்ரரத்ன மண்டபத்திற் - பேணிக்கொள் 41

தங்காத ஞயகியுந் தாமு மெழுந்தருளிச்
சிங்கா தனத்தவிசிற் சென்றிருந்து - நங்கூடல் 42

தான் - தன்னை அடைந்தோர் மேலாகும்படி விசேடம்பெற்ற திருமயிலாடுதுறையென்னும் ஸ்தலத்தை யுடையவர்.

34. மின்னம்மை - அம்பிகையின் திருநாமம். நடங்கொள்ளல் சேவிப்போருடைய தொழில்.

35. பங்குனியுத்தரத்தில் தீர்த்தம்.

35 - 6. காவல் - காத்தல்; வெள்ளேறு - இடபம்; திருமாலாகிய வெள்ளேறு. ஒருநாள் - ஒன்பதாந்திருநாள்.

37. சகங்காட்டும் கங்குல் - உலகில் தோன்றும் இருள். அருணன் - சூரியன்; அவனுடைய தேர்ப்பாகனுமாம்.

38. எல் மலை வில்லி - ஒளியையுடைய மேருமலையாகிய வில்லையுடையவர்.

39. திருவனந்தல் - விடியற்காலத்தில் நடைபெறும் தரிசன விசேடம். தெய்வ உலா - அக்காலத்தில் ஸ்வாமி திருப்பள்ளியறையினின்றும் எழுந்தருளுதல்.

40. திவ்யம் - தெய்வத்தன்மை.

41. நித்திலத்தரளம் - இருபெயரொட்டு. ப்ரவாளம் - பவளம்.

42. 'தம்' : ஒருமையிற் பன்மை வந்தவழுவமைதி; இதுபோன்ற பிரயோகத்தை இந்நூலிற் பல இடத்துங்காணலாம். தவிசு - மெத்தை முதலியன.

ஊரிற்குண் டோதரற்கா வூட்டத் தனிபிரிந்து
பாரிற்செல் வையைப் பகீரதிப்பெண் - பேர்வுற்ற 43
நீட்சிப் பிரிவொழிய நேடி மணப்பதெனக்
காட்சித் திருவபிடே கங்கொண்டு - மாட்சி 44
அலங்கார மாக்கொளத ளாடை யிரண்டும்
விலங்காடை யென்ன விலக்கி - நலங்காணும் 45
மன்போசன் முத்து வடுகநா தேந்த்ரனருள்
பொன்போலு மாடை புனைந்தருளித் - தன்போல் 46
திகழ்ந்திடுங்க ணன்றித் திருமுடியுந் திங்கள்
புகுஞ்செல்வங் கண்டு பொருன்போல் - மிகுங்கதிர்சூழ் 47
செம்பருதி தானுமொக்கச் சேர்ந்து சுடர்வதென
அம்பொன் மணிமகுட மாங்கமைத்து - விம்ப 48
நணிமகர மண்டலமா நன்முகத்திற் கேற்ப
மணிமகர குண்டலங்கள் வைத்துத் - திணிகொள் 49

திருச்சாந்தணிதல்

மணிகண்ட னென்னும்பேர் மற்றிதனு லென்ன
அணிமணிக் கண்டிகண்டத் தார்த்துக் - கணிதிருச்சாந் 50

---

42 - 3. கூடலாகிய ஊர் - மதுரை. வையை நதிப்பெண் - கங்கை; வையையாகிய பகீரதிப்பெண்ணெனக. குண்டோதரனுக்குண்டாகிய பெருந்தாகத்தைத் தீர்த்தற்பொருட்டு ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் கங்கையைத் தமது திருமுடியினின்றும் பூமியிற்பெருகச் செய்தாரென்பதும் அதுவே வையைநதியாயிற்றென்பதும் பழையவரலாறு (திருவிளை. அன்னக்குழியும்.)

45. அதள் ஆடை இரண்டு - புலித்தோலும் யானைத்தோலும். விலங்காடை - மிருகங்களின் தோலாகிய ஆடை; விலகுதற்குரிய ஆடை.

46. மன் போசன் - புகழால் உலகில் நிலைபெற்ற போசராசன் போல் வாழுகிய; போசன் - வடக்கேயுள்ள தாராநகரத்தில் இற்றைக்கு 1200-வருடங்களுக்கு முன்னேயிருந்து அரசுபுரிந்தவனும் பெருங்கொடையாளியும் ஸ்ரீ காளிதாஸன் முதலிய பண்டிதர்களை ஆதரித்து வடமொழியை வளர்த்தவனுமாகிய ஓரரசன்; முத்துவடுகநாதேந்திரன் - முத்துவடுகநாத துரை; இவர் சிவகங்கையிலிருந்த அரசர்களில் ஒருவர்; மருத பாண்டியரென்னும்பிரபுவின் காலத்திற்கு முன்பிருந்தவர். ‘தன்’ என்றது சூரியனை.

47. முகக்கண்கள் - சந்திரனும் சூரியனுமென்பது அறியற்பாலது.

48. பருதி - சூரியன். விம்பம் - ஒளி.

49. நண் இமகரம் மண்டலமாம் - பொருந்திய சந்திரமண்டலத்தை ஒத்த.

50. மணிகண்டன் - நீலகண்டர்; இரத்தினத்தையணிந்த கண்டரென்பது மற்றொருபொருள். கணித்தல் - மதித்தல். திருச்சாந்து, கிருஷ்ணகந்தமென்று வழங்கப்படும்.

தாகம் பவளா சலமென் றவிர்சடைவாழ்
மேகம் படிந்த விதமென்ன - மோகம் 51
முதிர முதிர முழுதுடம்புந் தேவிக்
கெதிரி லவனீந்த தென்ன - மதிநுதலெம் 52
பொன்னனை யாட்களித்த போதிரத வாதத்து
மன்னுபுகை மேற்பரந்த வண்ணமென - மின்னுறவே 53
வெம்மைக் கலிதீர்த்த மேனு ணளன்றந்த
செம்மைப் பதக்கமுரஞ் சேர்வித்துத் - தம்மைத் 54
திருவரைக்கோ மாட்டி தினந்தழுவுங் கைபோல்
மரகதக்கே யூரம் வளைத்துப் - பருநன் 55
மணிக்கைவளை யென்ன வரும்பேர்க் கிசைய
மணிக்கை வளைகரத்தில் வைத்துத் - துணைக்கமலப் 56
பூவிற் கருகுதிக்கும் பூங்கதிர்போ னுமெல்லாம்
சேவிக்க ரத்னச் சிலம்பணிந்து - மேவுற்ற 57
தம்பொற் சடைக்கிடக்குந் தண்கார்மின் னிட்டனைய
செம்பொற் றிருவா சிகைசேர்த்தி - எம்பிரான் 58
மேன்மை வடிவமுடி மேற்பெண் டியானிக்கும்
பான்மையெனக் கண்ணுடி பார்த்தருளி - நான்மறைநூல் 59
ஓர்ந்தமறை யோர்செ யுபசார மீரெட்டிற்
சார்ந்ததிரு வாரா தனைகொண்டு - தேர்ந்தங் 60

---

51. "தம்பொற் சடைக்கிடக்குந் தண்கார்" என்பர் பின்னும் (58); "பிறையிட்ட திருச்சடையிற் பெயனுன்கும் வரவிடுத்தான்" (திருவிளை. வருணன்விட்ட. 17) என்பதனுலுமுணர்க.

52. முழுதுடம்பும் - உடம்புமுழுவதும். எதிரில்லவன் - சிவ பெருமான்.

50 - 53. திருச்சாந்து மின்னுறவென்க. இவ்வடிகளால் திருச்சாந் தணிதல் கூறப்பட்டது; "திருச்சாந் திலேபனமுஞ் செய்து" (தேவை யுலா, 84)

54. "நள சக்ரவர்த்தி முன்பட் டுழைக்குங் கலிதீர்த் துவந் தோன்" என்ருர் முன்னும் (24); நளபதக்கமென வழங்கும் மூன்று பதக்கங்கள் இன்றும் இத்திருக் கோயிலில் உள்ளன.

55. கேயூரம் - வாகுவலயம்; தோள்வளை.

56. கைவளை - சிறுவளை. துணை - இரண்டு.

57. அருகு - சமீபம். சூரியன் இரத்தினச்சிலம்பிற்கு உவமம்.

58. சிவபெருமானுடைய சடையில் மேகம்கிடத்தல், இந்நூல் 51-ஆம் கண்ணியின் குறிப்பாலுணரலாகும்.

59. முடிமேற்பெண் - கங்கை. கண்ணுடிக்குக் கங்கை உவமம்.

60. உபசாரம் ஈரெட்டு - ஷோடசோபசாரம். "மாசிலுப சாரங்கண் மஞ்சனம் பூக்கந்தமணி, நேசவனந் தூபமொளி நீறதன்பின், தூசடைக்

கெழுதாச் சுருதி யெழுதுஞ் சுருதி
செழுமாத் திருச்செவியுட் சேர்த்திக் - குழுமித் 61
தருமோசை தேவர் சயசய வென்ன
வருமோசை மாமுனிவ ரோசை - இருவர் 62
நரம்போசை தெய்வநந்தி நம்பிரான் செங்கைப்
பிரம்போசை யோடும் பிறங்க - விரும்போசைச் 63
சீர்மணிப்பொற் கோயிற் றிருப்பேர் சுமந்தருள
வார்மணிப்பொற் றண்டின் மகிழ்ந்தேறி - நீர்மை 64
உணர்வரும்பஃ றேவ ரொர் துங்க வடியார்
கணநெருங்கும் வாயில் கடந்து - மணநெருங்கும் 65
தென்ற னடந்தினிது சேவிப்பத் தென்பாண்டி
இன்றமிழ்நா டுய்ய வெழுந்தருளிக் - கொன்றையளி 66
பாடுஞ் சடைக்கணிந்த பாகீ ரதிக்கேறி
ஆடும் படிபறக்கு மன்னமென - மாடிரட்டு 67
நீடு கவரி நிரைதுள்ள மாமணித்தேர்
ஊடு கவரி யுடனேறிச் - சூடியதன் 68
பிள்ளைமதி பார்க்கப் பெருமதிவந் தென்னநிலாக்
கொள்ள வுயர்வெண் குடையோங்க - விள்ளும் 69

காய், ஆடைகுடைகவரி யாடலிசை வாச்சியங்கள், நீடுபதி ஞரு நினை". (தனிப்பாடல்)

61. எழுதாச்சுருதி - வேதம். எழுதுஞ்சுருதி - தேவாரமுதலியவைகள்; "எழுதா மறையு மெழுது மறையும், வழுவாது கேட்டு மகிழ்ந்து" (திருவிடை. 197)

62. இருவர் - தும்புருநாரதர்; "எள்ளி லிருவ ரியாழ்முரல" (107)

63. விரும்பப்படும் ஓசையையுடைய.

64. திருப்பேர் - சிவகைங்கரியஞ் செய்பவர். தண்டு - திருவாடு தண்டு; 'திருவாடு தண்டினு மேற்செல்ல' என்பர் பின்னும்; 89.

65. பஃறேவர் - பல தேவர்.

67. பாகீரதி - கங்கை. மாடு இரட்டும் - பக்கத்தில் மாறி அசையும்.

67 - 8. சாமரைக்கு அன்னம் உவமை; அன்னப்பறவை ஆகாயகங்கையை விரும்பும்.

68 - 9. "பிள்ளை மதியினைமுன் பெற்றெடுத்த தாய்மதிபோல், வெள்ளை மதிக்கவிகை மேனிழற்ற" (திருவெங்கை. 94); "எரியவிர்ந் தனைய துவர்மணிச் சடிலத் தெறிதிரைக் கங்கையூ டலைந்து, பருவருங் கேண்மைச் சிறுபிறைக் கிரங்கிப் பற்றித்த னிருக்கையிற் கொடுபோய்த், தெருமரா தளிப்பான் முழுமதி யணுகிச் செவ்விபார்த் துறைவது மானும், விரிகதிர்த்தாளத் தொங்கல்சூழ் வட்ட வெண்குடை மீமிசை நிழற்ற" (காஞ்சிப். தல விசேட. 3)

கொடைக்கடவு ணல்லான் குழாம்புக்கு விண்ணின்
விடைக்கொடி நின் ருங்கு விளங்கச் - சுடர்க்கடவுள் 70

பன்னிருவ ரல்லர்மதி பார்த்திடினே யொன் றன்ருல்
உன்னி னநேக ருளரென்ன - மின் னுகதிர்க் 71

கோலநிறை ரத்னக் குடையும் பருமுத்தின்
சீல மணிக்குடையுஞ் சேணிழற்ற - மேலை 72

வினைப்பகையார் வம்மின் வினைக்குரியார் போமின்
எனப்பீலி யாடி யிலங்கப் - பணைக்கைமுகன் 73

மூடிகத் தேரேறி முன்னடப்பச் சேய்கலவ
நாடகத்தே ரேறி நடந்தருள - ஊடணையும் 74

அன்னத்தே ரேறி யயன்மா றிருக்கருட
வன்னத்தே ரேறி மருங்குவரப் - பொன்னுைத்த 75

ஆதித்த ராறிருவ ராறிரண் டேழ்புரவிச்
சோதிப்பொற் றேரேறிச் சூழ்போதக் - கோதற்ற 76

சீதக் கதிர்முத்தின் றேர்மீதிற் புட்பகத்தேர்
மீதிற் பெருந்தோழன் மேவிவரத் - தீதற்று 77

வந்தணையும் வெள்ளை மதவயி ராவதத்தேர்
இந்திர னேறி யினிதெய்தச் - செந்தழலோன் 78

---

70. கொடைக் கடவுள் நல் ஆன்குழாம்-கொடுத்தலையுடைய காம தேனுவின் சாதியாகிய தெய்வப்பசுவின் கூட்டத்தில். புக்கு ஆங்கு நின்று விளங்க.

71. மதியும் பலவுண்டு. 72. சீலம் - நல்ல இலக்கணம்.

73. பீலி - மயிலிறகாற்செய்த சிற்ருலவட்டம்; "கடைந்துபெய் மணிக்கைச் செம்பொற் காசறு தகட்டிற் சூழ்ந்து, மிடைந்துபெய் மணிக் கட் பீலி மின்னுசாந் தாற்றி" (சீவக. 839). பணைக்கைமுகன் - விநாயகக் கடவுள்.

74. மூடிகத் தேர் - பெருச்சாளியாகிய வாகனம்; தேரென்பது ஊர்திகளின் பொதுப்பெயராகவும் வழங்கும்; "அன்னத்தே ரேறி யயன் வலப்பாற் கைபோத" என்பது ஆதியுலா. சேய் - முருகக்கடவுள். கலவம் - கலாவம்; மயிலின் ருேகை; கலவநாடகத்தேர் - மயிலாகிய ஊர்தி.

75. "அன்னத் தேரின னயன்வலப் பாங்கரு மராவலி கவர்சேன, வன்னத் தேரினன் மாலிடப் பாங்கரு மலர்க்கரங் குவித்தேத்த" (திருவிளை. 5 : 113)

76. ஆறிரண்டு தேரென்க.

77. சீதக்கதிர் - சந்திரன். முத்தின்தேர் - முத்துவிமானம். புட்பகத்தேர் - புட்பகவிமானம். பெருந் தோழன் - குபேரன்.

நீதி மறலி நிருதிவரு ணன்பவனன்
ஆதியீ சான னடலூர்தி - மீதுவரக் 79

கூறும் பதினொருவர் கூறருஞ்சாத் தன்வடுகன்
ஏறும்பன் ஞாளி யினிற்போத - மாறின்றி 80

ஏழ்முனிவ ரெண்ம ரிருவ ரொருதனித்தம்
தாழ்வில் விமானந் தமிற்செல்லச் - சூழியக்கர் 81

கந்தருவர் சித்தர் கருடர் சுரருரகர்
வெந்திறற் கின்னரர்சே வித்துவரத் - தந்தைதாய் 82

வேணு புரக்கோலம் வீழி மிழலையிடைப்
பேணும் வகைபார்த்த பிள்ளையும் - பூணுமருள் 83

மெய்யாக் கயிலைமலை வீற்றிருந்த தன்கோலம்
ஐயாற்றிற் கண்டருளென் னப்பனும் - எய்யாமல் 84

ஆடிச் சிவக்கு மடியைத்தென் னாரூரிற்
பாடிச் சிவப்பேற்றும் பாவலனும் - கூடற்குள் 85

ஆசில் வழுதி யரசற்குச் சம்புவால்
வாசி வரவழைத்த மந்திரியும் - வீசுதிரை 86

சேர்க்குங் கடற்புவிக்குட் டெய்வச் சிவலோகம்
பார்க்க வரவழைத்த பார்த்திவனும் - நீர்க்குடிலப் 87

---

79. பவனன் - வாயுதேவன். ஆதியாகிய ஈசானன்.

80. ஏறு - இடபம். உம்பல் - யானை. பதினோருருத்திரர் ஏறுகளிலும் ஐயனார் யானையிலும் வைரவக்கடவுள் ஞாளியின்மீதும் போத; ஞாளி - நாய்.

81. எண்மர் - அஷ்டவசுக்கள். இருவர் - மருத்துவர்.

82 - 3. தந்தைதாய் - சிவபெருமானும் உமாதேவியாரும். வேணுபுரம் - சீகாழி. பிள்ளை - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்; இவர் சீகாழியில் திருத்தோணியின்மீதுள்ள உமாமகேசத் திருக்கோலத்தைத் திருவீழிமிழலையில் தரிசித்தனர். இதனை, "மைம்மருபூங்குழல்" என்னும் தேவாரத்தாலும் "சண்பைத் திருமறையோர்களெல்லாம்" (திருஞான. 552) என்னும் பெரியபுராணத்திருவிருத்த முதலியவற்றாலுமுணர்க.

84. அப்பன் - திருநாவுக்கரசுநாயனார். எய்யாமல் - இளையாமல்.

85. அடியைச் சிவப்பேற்றியது - பரவையாருடைய திருமனைக்கு இறைவனைத் தூதுபோகும்படி செய்தது. பாவலன் - சுந்தரமூர்த்திநாயனார்.

86. சம்பு - பரமசிவன், நரி. வாசி - குதிரை. மந்திரி - மாணிக்கவாசகர்.

87. பார்த்திவன் - வரகுணபாண்டியர். குடிலம் - சடை. சிவலோகம் வருவித்ததை, திருவிளையாடலில் வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலத்தாலுணர்க.

பொன்முடிக்கு ஏன்றிப் புனேயாத் திருக்கொன்றை
தன்முடிக்குள் வாங்கித் தரிப்போனும் - நன்மை 88
ஒருவாத தத்தமணி யூர்தியினுஞ் சேமத்
திருவாடு தண்டினுமேற் செல்லப் - பிரியாத 89
எப்பற்றுந் தீர்நாற்பத் தெண்ணு யிரவரெனும்
ஒப்பற்ற வேடத் துயர்ந்தோரும் - மெய்ப்புற்ற 90
சுந்தரன் பாடுதிருத் தொண்டத் தொகைக்குளொன்பான்
வந்த திருக்கூட்ட மாதவரும் - சந்ததமும் 91
நாவகத்து மார்பகத்து நற்றிருமுன் னூல்கிடக்கும்
பாவகத்த ராம்வேத பாரகரும் - பூவணவன் 92
தெய்வத் திருமேனி தீண்டத் தவம்பெற்ற
சைவப் பெருமறையோர் தங்கிளேயும் - உய்விப்போன் 93
கண்ணகன் கோயிற் கயிங்கரியஞ் செய்வோரும்
பண்ணமர்பாட் டோதும் பரிசனமும் - எண்ணிறந்த 94
தீர்க்கத் தபோதனருஞ் சேவிப்போ ருஞ்சைவ
மார்க்கப் பதினெண் மடத்தாரும் - ஏற்கநிறை 95

---

88. தரிப்போன் - தண்டீசர்; "அங்கரவத் திருவடிக்காட் பிழைப்பத் தந்தை யந்தணனே யறவெறிந்தார்க் கருளப்போதே, கொங் கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலுங் குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனரே" (தே.)

90. நாற்பத்தெண்ணுயிரவர் - நாற்பத்தெண்ணுயிரமுனிவர்; இது குழூஉப் பெயர்; "எண்ணு மொருநாற்பத் தெண்ணு யிரவரெனும், புண்ணிய வேடப் புனிதரும்" என்பது ஏகாம்பரநாதருலா, 96. மெய்ப்பு - புகழப்படுதல்.

91. ஒன்பான் கூட்ட மாதவர் - தில்லைவாழந்தணர், பொய்யடிமை யில்லாதபுலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத் தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்பொழுதும் திருமேனிதீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச் சார்ந்தார்.

92. முன்னூல் (=முந்நூல்) - பழைய நூலாகிய வேதம்; முப்புரி யாகிய பூணூல். பாவகம் - தியானம். பாரகர் - கரைகண்டவர்; வைதிகப்பிராமணர்.

93. ஆதிசைவப்பிராமணர். உய்விப்போன் - சிவபெருமானுடைய.

94. பண் அமர் பாட்டு - தேவாரம். ஓதும் பரிசனம் - ஓதுவார்கள்.

95. தீர்க்கத்தபோதனரில், எதுகைபற்றி வல்லொற்று மிக்கது. பதி னெண்மடத்தார் - சிவாகமபத்ததிகள் பதினெட்டையும் இயற்றிய ஆசாரியர்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர். அப்பதினெண்மர் களாவார்: துர்வாஸசிவர், பைங்களசிவர், உக்கிர ஜ்யோதி, ஸ்ரீகண்டர், விஷ்ணு கண்டர், ஸுபோதர், வித்தியா கண்டர், இராமகண்டர்,

அண்டர் பணியு மழகிய நாயகர்முன்
மண்டபஞ்ச பாபதி மண்டபமும் - கண்டருளிச் 96

சித்தங் களிகூர் திருக்கண்ண ராசேந்த்ர
உத்துங்க னுங்குலத்தி லுள்ளோரும் - அத்தற் 97

கமைக்குங் கொடிக்கம்ப மண்டபமு மம்பொன்
இமைக்கத் திருமுன் னியற்றி - உமைக்கு 98

முரசதிர் கோயின் முதற்பிர காரத்
திருமதிலு மண்டபமுஞ் செய்வித் - தொருதன் 99

வரிசைப்பேர் கொள்பூ வணலிங்க மென்னும்
உரிமைப்பே ரான்சுற்றத் தோரும் - பெரியமணி 100

கன்னிகைத் தீர்த்தக் கரைமதிலு மண்டபமும்
மன்னுபுடை சுற்றுமாள் வாரியுடன் - முன்னிமுடித் 101

ஞானசிவர், ஞானசங்கரர், ஸோமசம்பு, பிரஹ்மசம்பு, அகோரசிவர், வருணசிவர், திரிலோசன சிவர், பிரஸாதசிவர், இராமநாதசிவர், ஈசான சிவரென்பவர்கள்; "பதிணென் மடத்திற் பயிலு - முதலிகளும்" என்பது திருவானைக்காவுலா; "வெண்ணீற்று, வண்டற் பதினெண் மடத்தாரும்" என்பது திருக்காளத்திநாதருலா, 194.

96. அழகிய நாயகர்-பொன்னனையார் செம்பொன்னால் இயற்று வித்த மூர்த்தி; "பணிபவ ளழகு கண்டே பரவுமெம் பெருமா னுக்கிங், கணிபொலிவடிவ மச்சோ வழகிய வாவென் றன்பி, னிணையிலா வருங்க போலத் திருகையான் மாறி யள்ளித், தணிவற முத்த முண்டாள் சம்புவி னருளை வாழ்த்தி", "மணமலி பெருமாற்கச்சோ வழகிய தெனலான் மண்மீ, தணி திருநாம நின்ற தழகிய பெருமா னென்றே, யுணர்வுளா ளுளுஞ் சித்தர் சித்தரென் றெழியாளாகி, யிணையிலா வடிவத் தோடு மேகினுள் சிவலோ கத்து" (திருவாலவாய். 45 : 15, 17); "மழவிடை யுடையான் மேனி வனப்பினை நோக்கி யச்சோ, அழகிய பிரானே வென்னு வள்ளிமுத தங்கொண் டன்பிற், பழகிய பரனை யானுப் பரிவினுற் பதிட்டை செய்து, விழவுதேர் நடத்திச் சின்னுள் கழிந்தபின் வீடு பெற்றுள்" திருவிளை. 36 : 29.

97. திருக்கண்ண ராசேந்த்ர உத்துங்கன் - திருக்கண்ணதேவர்; இவர் சிவகங்கை அரசர்களுடைய உறவினர். இவருடைய பரம்பரையோர் இக்காலத்துத் திருப்பூவணத்தைச்சார்ந்த பிரமனூரிலிருக்கின்றனர்; உத்துங்கன் - உயர்ந்தவன்.

99-100. தன் வரிசைப்பேர் - பூவணலிங்கமென்பது; 'தன்' என்றது சிவபெருமானை. பூவணலிங்கமென்னுமுரிமைப்பேரான் - பூவண லிங்கம் பிள்ளை யென்பவர்; இவருடைய வழித்தோன்றலாகிய மருதநாயகம் பிள்ளை யென்பவர் இப்பொழுது மதுரையிலிருக்கின்றனரென்பர்.

101. ஆள்வாரி - ஆளோடி.

தூறுசீர்ப் புண்ணியநீர்க் குள்ளிறங்கி நானஞ்செய்
தேறுவார் சொர்க்கத் திருகால்வைத் - தேறப் 102
படிகட்டி யன்ன படிகட்டி நாளும்
வடிகட் டியதருமம் வாய்த்தோன் - முடிகட்டும் 103
துன்னு நதிமரபிற் றோன்றீ சுரமூர்த்தி
என்னு மவனு மியல்கிளையு - மின்னும் 104
கருத்தொன்றி வந்துசிவ காரியங்கள் செய்யும்
திருத்தொண்டர் தங்க டிரளும் - நிருத்தஞ்செய் 105
செம்பொனிதழ்க் கும்பமுலைச் சேனயனப் பால்வயனத்
தம்பொனிறத் தேவ ரடியாரும் - பம்புதிரை 106
வெள்ள மெனத்திரண்டு வீதிக் கரைபுரள
எள்ளி லிருவ ரியாழ்முரலத் - துள்ளுகணப் 107
பானுகம்பன் சங்கம் பரிந்தூத வாணன்கார்
மானுங் குடமுழவம் வாசிப்ப - ஆனயர் 108
மெய்யஞ் செழுத்தால் விரவுங் குழலோசை
ஐயன் செவிக்கின் னமுதூற்றப் - பொய்யன்பில் 109

---

102. ஊறுசீர் - ஊறுகின்ற இயல்பையுடைய. நானம் - ஸ்நானம்.
103. வடிகட்டிய - ஆராய்ந்தெடுத்த.

104. நதிமரபு - கங்காகுலம். ஈசுரமூர்த்தி-ஈசுவரமூர்த்தியா பிள்ளையென்பவர்; திருப்பூவணத்திற்கு மேற்கே ஒன்றரைநாழிகை வழித்தூரத்திற் சாலையில் ஈசுவரமூர்த்தியா பிள்ளைமடமென்று ஒரு பழைய கட்டிடமிருந்து சிலவருடங்களுக்குமுன்பு இடிந்துபோயிற்றென்பர். இவருடைய பரம்பரையோர் திருப்பூவணத்திலே இருக்கின்றனர். கிளை - சுற்றம்.

106. வயனம் = வசனம் - சொல்; "நால் வயனத்தவ" என்பர்; திருவிளை. 24 : 27.

107. இருவர் : 62.

108. பானுகம்பன் - சிவகணத் தலைவர்களிலொருவன். வாணன் - வாணாசுரன். பானுகம்பனுக்கு வாய்கள் ஆயிரம்; வாணாசுரனுக்குக் கைகள் ஆயிரம் (திருவிளை. 5 : 104, பார்க்க). "பெய்யு மாமழை முகிலெனப் பெரியவாய்முழவம், துய்ய மாமதி யனையவெண் கரிமுகச் சங்கம், ஐய வாணனும் பானுகம் பப்பெய ரவனுங், கையும் வாயுமொத் ததிர்த்தனர் செவிகரங் கவிழ்ப்ப," (பிரபுலிங்க. கைலாய. 45); "தொள்ளை வளை, யொன்று யிரம்வா யொலிக்கு மவைபோன்று, சென்று யிரமெண் டிசைவிழுங்கக் - குன்றுத், திரண்டா யிரங்கை தெழிக்குமது போற்கை, இரண்டான் முழவொன் றிரங்க" (திருவெங்கை. 94 - 6). ஆனயர் - ஆனய நாயனர்.

109. அஞ்செழுத்தால் - பஞ்சாக்கரத்தோடு; பெரிய. ஆனய. 22, 29.

சம்பந்தர் கைத்தாளந் தாக்கிட நீலகண்ட
எம்பெரும் பாண ரிசைகூட்டப் - பைம்பொன் 110

முருடு தடாரிதக்கை மொந்தை பதலை
இரலை திமிலைமுர சேங்கத் - திரையெறியும் 111

வையை நதித்தீரன் வந்தான் மணிகுண்டச்
செய்யநெடுந் தீர்த்தச் சிவன்வந்தான் - துய்ய 112

நலஞ்செய் நவக்கிரக நாட்களிவை நாளும்
வலஞ்செய்யு மூருடையான் வந்தான் - பொலஞ்செய்ய 113

பொன்பதும மானனைய பொன்னனை யாண்மனைக்குள்
அன்பமுது கொண்டவரன் வந்தான் - முன்பிரத 114

வாதஞ் செயுஞ்சித்தன் வந்தான் மதிக்குடைவேள்
போதஞ்செயும்போர் பொருன்வந்தான் - மோதுவிடம் 115

தண்கழுத்தில் வைத்துநெடுந் தாலிசெழுந் தாமரையின்
பெண்கழுத்தில் வைத்த பிரான்வந்தான் - எண்கழிக்கும் 116

துங்க வமரர் தொழும்பா வணங்கொடுக்கும்
செங்கம லச்சரணத் தேவந்தான் - எங்கள் 117

---

110. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கோலக்காவிற் பொற்றாளம்பெற்று ஒத்தறுத்துப் பாடியவராதலின், இங்ஙனங் கூறப் பெற்றனர்; "கையதனு லொத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த, செய்ய சடைவானவர்த மஞ்செழுத்து மெழுதியசெம் பொற்று ளங்கள், ஐயரவர்திருவருளாலெடுத்தபா டலுக்கிசைந்த வளவா லொத்த, வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த வன்றே" (பெரிய. திருஞான. 103 - 8) என்பதனுலுணர்க. திருநீலகண்ட யாழ்ப் பாணர்.

112. மணிகுண்ட நெடுந்தீர்த்தம் - மணிகர்ணிகாதீர்த்தம். 'செய்ய நெடுந்தீரச்சிவன்' என்றும் பாடம்.

113. நவக்கிரகங்களும் நக்ஷத்திரங்களும் இத்தலத்தை வலஞ் செய்தல், "எண்ணி லங்குறை சராசர மிலிங்கமென் றெண்ணி, விண்ணி னுள்களுங் கோள்களும் விலங்குவது" (திருவிளை. 36 : 3) என்பதனுலும் விளங்குகின்றது; இந்நூல், 371-ஆம் கண்ணியைப் பார்க்க.

115. வேள் போது அஞ்சு எய்யும் போர் - மன்மதன் ஐந்து மலர்ப் பாணங்களை எய்யும் சண்டையை.

115 - 6. விடத்தைத் தன்கழுத்தில் தரித்தருளி. பெண் - திருமகள். பெண்கழுத்தில் தாலியைவைத்த. எண்கழிக்கும் - அளவு கடந்த.

117. தொழும்பு ஆவணம் - அடிமையோலை.

பழவினை வேரறுப்பான் வந்தான் பருவெண்
மழவிடை யேறுயர்த்தான் வந்தான் - அழகியமின் 118

மங்கைக்கு வாய்த்த மணவாளன் வந்தானென்
றங்கத் திருச்சின்ன மார்ப்பெடுப்பப் - பொங்கு 119

நதிமாதர் கோக நகமாதர் தெய்வ
மதிமாதர் நீடுவசு மாதர் - கதிர்மாதர் 120

ஏழ்மாதர் வேலோ னிருமாத ரெண்டிசைக்கே
வாழ்மாத ரேழ்முனிவர் மாதர்கள் - சூழ்வானச் 121.

சுந்தர மாதரெனத் தோன்றிரதி மாதருடன்
அந்தர மாத ரனைவர்களும் - சிந்தைமகிழ் 122

கோலங்காட் டித்தான் குனிக்குந் திருக்கூத்தை
ஆலங்காட் டிற்பார்க்கு மம்மையரும் - மூலங்காண் 123

சீரிசை யாடிநிழற் செம்ம றலைப்பயந்த
பேரிசை ஞானிப் பிராட்டியரும் - ஏரிசைதென் 124

சையத் தமிழ்நாட்டிற் சைவந் தலையெடுப்பச்
செய்விக்கும் பாண்டிமா தேவியரும் - உய்விக்கும் 125

---

118. தம்மை அடைவாருடைய எல்லாப் பாவங்களையும் தீர்த்தருளுதல் பற்றித் திருப்பூவணேசருக்கு அடைவார் வினைதீர்ப்பவரென்பது திருநாமமாதலால், இங்கே 'பழவினைவேரறுப்பான்' என்றார்; "அடைவார் வினைதீர்த்த, பேரைப்புதுக்கீர் பிரான்" (154); "அடைவார் வினைதீர்க்கு மம்மான்" (467) என இந்நூலுள் வந்திருத்தல்காண்க; "அடைவார் வினைதீர்க்கும், புரிவுடை யாருறை பூவண மீதோ", "அண்ணலெ ணுநினை வார்வினை தீர்ப்பார்" (சுந்தர. தே. 1, 2) என்னும் திருவாக்கையும் உணர்க.

120. மதிமாதர் - சந்திரனுடைய தேவிமார். கதிர் - சூரியன்.

123. ஆலங்காடு - திருவாலங்காடு. அம்மையர் - காரைக்காலம்மையார்.

124. ஆடி - கண்ணாடி. ஆடிநிழற்செம்மல் - சுந்தரமூர்த்திநாயனார். "அந்தமாதியி லானிழல் வடிவமா யாடியி னிழல்போல, வந்த சுந்தரன்" (திருவிளை. 5 : 112), "இட்டநமக் கோரிளவ லின்றுவரு மென்றுமலர், மட்டுறுதாராரூரன் மன்னுவகை - யுட்டுளைய........பவளக் காற் கண்ணாடி பார்த்து" (திருவிடை. 186-9) என்பவை இங்கே அறியற்பாலன. பேரிசை ஞானிப்பிராட்டியார் - இசைஞானியார்.

124-5. தென்சையம் - பொதியின்மலை. தமிழ்நாடு - பாண்டிநாடு. பாண்டிமாதேவியர் - மங்கையர்க்கரசியார்.

அந்தண் வயற்பொலிதென் ஞரூரி னம்பிக்கா
வந்துலகி லுற்பவித்த மங்கையரும் - செந்துவரின் 126
மின்றழைத்த வேணி விமலனைத் தன்வீட்டில்
அன்றழைத்த மெய்ப்பொ னனையாரும் - நின்றுருகி 127
ஆரணச் செம்பொ னடிபோற்ற வெம்பெருமான்
தோரண வீதிதனிற் றேன்றினனுற் - சேரமரர் 128
தட்ப வனப்பாரி சாத வனமழையாற்
புட்பவன மாம்பேர் புதுக்கினர் - பெட்புமின்னுள் 129

குழாங்கள்

போர்க்கைத் திருமழுவார் புட்ப வனப்புதுமை
பார்க்கத் திரண்டகிளிப் பண்பென்னப் - பேர்க்கரிய 130
நீலகண்டந் தம்போ னிமலன் படைத்திருந்த
கோலநின்று பார்க்குமயிற் கூட்டமெனப் - பாலுகந்த 131
ஆகத் தழகியமின் னம்மை யெழில்பார்க்க
மேகத்தை விட்டுவந்த மின்களென - வேகவொற்றை 132
மான்விட் டதனுல் வசஞ்செய்தா னென்றறவோர்
தான்விட்ட மான்கூட்டத் தன்மையென - வான்முட்ட 133
ஏங்கக் குயிலைமகத் தீடழித்தா னென்றுபழி
வாங்கக் குயிறிரண்டு வந்தவென - ஆங்கொரனம் 134

---

126. உற்பவித்தமங்கையர் - பரவைநாச்சியாரும், சங்கிலிநாச்சியாரும். துவர் - பவழம்.

128 - 30. அடிபோற்றல் : கம்ப. மிதிலைக்காட்சி. 30. தண்பவனம் - தண்ணியகாற்றையுடைய; தட்பத்தையும் அழகையுமுடையவென்றுமாம். தேவர் மலர்மாரிபொழிந்தார். மின்னுள் - அழகிய மின்னம்மை. கை - காம்பு ; திருமழுவார் - மழுப்படையையுடைய திருப்பூவணேசர் : இவ்விருவரும் எழுந்தருளிய புட்பவனமென்க. பேர்க்க அரிய - நீக்குதற்கரிய.

131. மயிலுக்கு நீலகண்டமென்று ஒருபெயருண்டு; காரணப்பெயர்; "கலவ மாமயி லெருத்திற் கடிமவ ரவிழ்ந்தன காயா" (சீவக. 1558) என்பதனுலு முணர்க.

132. மின்னம்மையாதலால் மின்கள் பார்க்க வந்தன.

132 - 3. வேக ஒற்றைமான் - வேகத்தையுடைய ஒருமான். அறவோர் - முனிவர். சிவபிரானை வெல்லுதற்குத் தாருகாவனத்துமுனிவர் யாகத்தில் ஒருமானையுண்டாக்கி அனுப்பியதும், அதனைப்பிடித்து அவர் திருக்கரத்திலேந்தியதும் இங்கே அறியற்பாலன ; தான் : அசைநிலை ; பல மானைவிடின் வசஞ்செய்யாரென்றெண்ணினர். வான்முட்ட - தேவருலக முழுவதும்.

134. குயிலை - இந்திரனுகிய குயிலை. மகம் - தக்கன்யாகம். இந்திரனுகிய குயிலை ஈடழித்தமை, "மடிந்தனன் கூற்றுவனுக வாசவன்,

காணுப் பழிப்பகலக் கண்டறிவோ மென்றரன்முன்
சேணுட்டி னன்னமெலாஞ் சென்றவெனத் - தாணுட்டு 135
முன்றிலின் மாட முகப்பினின் மேடையிற்செய்
குன்றினிற் சாளரத்திற் கோபுரத்தில் - மன்றில் 136
தடத்தினின் மண்டபத்திற் சாரரங்கிற் றெற்றி
யிடத்தினில் வீதியினி லெய்தி - மடற்குவளைச் 137
சேயரிக்கண் மின்னுர்நந் தெய்வப் பலாப்பழத்திற்
கீயினத்தின் மொய்ப்பா ரிருமருங்கும் - நேயமிகப் 138
பூத்து மலர்கருணைப் புட்பவனப் பூந்தேனைப்
பார்த்திருகண் வண்டாற் பருகுவார் - தீர்த்தனணி 139
கங்கை தவத்தை வியப்பார் கதிரிமவான்
மங்கை தவத்தை வழுத்துவார் - தங்கள் 140
தவக்குறையை நோவார் தடந்தோளை நோக்கி
நிவக்கு முலைநோக்கி நிற்பார் - உவக்கு 141
மிகச்சின்ன நுண்ணிடையார் மெல்லியலாள் வைத்த
நகச்சின்ன நோக்கியுள நைவார் - பகைச்சின்னம் 142
ஆவதென் னென்றிவர்மே லவ்வேளெய் யானென்பார்
பாவங் கொடிதெம் பழியென்பார் - தேவரிவர் 143

னுடைந்தனன் குயிலென வுருக்கொண் டும்பரின்,அடைந்தன னதுபொழு தண்ணல் கண்ணுறீஇத், தடிந்தனன் வீட்டினன் றடக்கை வாளினுல்'' (கந்த. யாகசங்கார. 28) என்பதனுல் விளங்குகின்றது.

135. தாள் - தோரணகம்பம்.

136. செய்குன்று - கட்டுமலை.

137. தடம் - நீர்க்கரை. தெற்றி - திண்ணை.

138. பலாமரத்தினடியில் எழுந்தருளியிருத்தல் பற்றித் திருப்பூவணேசரை, 'தெய்வப்பலாப்பழம்' என்றுர்; ''தேவி வளர்த்ததிருத் தெய்வப்பலாவடியின், மேவிப் பழுத்த வியன்கனி'' என்பர் பின்னும்; 195. ஈ - தேனீ.

141. தோள் - இறைவன்தோள்.

142. சின்ன - சிறிய; ''மாசின சின்னத்துணி'' (சீவக. 2929). மெல்லியலாள் - பொன்னனையாள். நகச்சின்னம் - பொன்னனையாளுடைய நகத்தழும்பு. ''நையுநுண் ணிடையி னுளந் நாயகன் கபோலத் திட்ட, கையுகிர்க் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு, வெய்ய வெங் கதிர்கால் செம்பொன் மேனிவே ருகி நாலாம், பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துரு வாகி மன்னும்'' (திருவிளை. 36 : 30). பகைச்சு - பகைத்து.

143. 'கொடிது' என்பதைப் பழியென்பதனெடுங் கூட்டுக.

வெள்ளிக் கிரிமுலையாய் மேவற் குபாயமிதென்
றள்ளித் திருநீ றலங்கரிப்பார் - உள்ளுறுபொன் 144
வாகார் பசலையிற்கை வன்சிலையாக் கொள்ளுமென
ஏகாசம் வீழ வெதிர்நிற்பார் - மாகாதல் 145
வெள்ளத்தை நீந்த விடையோனை நாவாய்கேட்
டுள்ளத்தி னுள்ளே யுருகுவார் - வள்ளல் 146
திருமேனிப் பாதியே தெள்ளமுத மற்றை
ஒருபாதி யும்விடமென் றேர்வார் - அரன்மேல் 147
விரிபூ மழைபோல் விரியாது தம்மேற்
சொரிபூ மழைநோக்கிச் சோர்வார் - அரிதாய 148
எம்மருந்தி னுற்சடைமே லிந்து குளிர்ந்திருப்ப
தம்மருந்தைச் சொல்லீ ரடிகளென்பார் - விம்மியமீன் 149
மேல்வலைவீ சிப்பிடித்தீர் மேனுளிந் நாள்விழிமீன்
மால்வலைவீ சிப்பிடிப்பீர் வந்தென்பார் - சால்கூடற் 150
செய்க்கரும்பைக் கல்லானை தின்னக் கொடுத்தீர்வேள்
கைக்கரும்பைத் தின்னுதோகாணென்பார் - மெய்க்
கரும்பாம் 151
பட்பவள வாயர்முனி பன்னியர்வாழ் தாருவனம்
புட்பவன மாக்கினீர் போந்தென்பார் - புட்பவனம் 152

---

145. வாகு - அழகு. பசலையின் - பசலையை உடைமையால்; பசலை பொன்னிறமுடையது. வன்சிலையா - மேருமலையாகிய வில்லாக. ஏகாசம். உத்தரீயம்.

146. நாவாய் - கப்பல்; நாவையுடைய வாய்; சிலேடை.

147. திருமேனிப்பாதி - அம்பிகையின்பாகம்.

148. மன்மதபாணம் மொட்டருமலராதலின், 'விரியாது தம்மேற் சொரி பூமழை' என்றார்; ''சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவ'', '' கருப்பு வில்லியை யருப்புக்கணை மைந்தனை '', ''கருப்பு வில்லி யருப்புக் கணை தூவ '' (மணி. 18 : 105, 20 : 92, 25 - 90) என்று வருதல்காண்க; '' கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வேள் '' என்பர்; சிதம்பரச்செய். 74.

149. சடை மேலுள்ள பிறை எந்த மருந்தினுற் குளிர்ந்திருக் கின்றது?

149 - 50. வலைவீசிய திருவிளையாடல் இங்கே அறியற்பாலது. மாலாகிய வலையை வீசி எம்விழிகளாகிய மீனைப் பிடிக்கின்றீர்.

152. பண்ணையுடைய பவளவாயர். நீர்போந்து புட்பவனத்தைத் தாருவனமாக்கினீர்.

காணி யுமக்கோவிற் காமனுக்கோ சொல்லீர்கைப்
பாணிமழு வேந்துநீர் பார்த்தென்பார் - தூணிமத 153
னுரைத் தடுத்தே யடைவார் வினைதீர்த்த
பேரைப் புதுக்கீர் பிரானென்பார் - பாரித்த 154
தேரோட வோடப்பின் சென்றோடி யோடிக்கண்
நீரோட வோடநின்று நெட்டுயிர்ப்பார் - சீரோடும் 155
அவ்விரத வாதந்தா னென்றுசெய்தா ரின்றுசெய்தார்
இவ்விரத வாத மெமக்கென்பார் - கவ்வைக் 156
கிடைவார் கலையு மிழப்பா ருருகி
உடைவா ரிவரு ளொருத்தி - தடமலரோன் 157

பேதை

அட்டதிக்கார் பெண்மை யழகு குடிபுகுத
விட்டதொரு மூர்த்தமெனு மென்பேதை - கிட்டுநனை 158
கூறும் பொதிமலர்பூங் கொட்டை மதுமணமோர்
ஆறுந்தன் னுள்ளடக்கு மம்புயம் - சீறும் 159
விழிதாங்கு நாதனைவில் வேளிரதி பண்டைப்
பழிவாங்கப் பெற்றனைய பாவை - எழிருங்கு 160
சங்கை மருவாத் தரள மிரதிபதி
செங்கை மருவாச் சிறுகரும்பு - பொங்கநலம் 161

---

153. காணி - உரியஇடம்; படைவீடு; "ஆர்க்கும் படைவே ளர சிருப்பென் றஞ்சா தடிக ளருட்காசி, யூர்க்கும் புதுத்தோ ரணம்வைத்தா லுமக்கிங்கிவள்பேச் சுரைப்பாரார்" (காசிக். 14) என்பது இங்கே அறி யற்பாலது. பாணி - கை; கை மழு ஏந்தும் நீர் - சிறிய மழுப்படையை ஏந்துகின்ற நீர்.

156. அவ்விரதவாதம் - அந்த ரஸவாதலீலை. இ இரதவாதம்-இந்தத் தேரால் தடுத்தலை; வாதம் - தடை. கவ்வை - துன்பம்.

157. இடைதல் - பின்னிடுதல்.

158 - 9. மூர்த்தம் - உருவம். நனையும் பொதியும் மலரும் கொட்டை யும் மதுவும் மணமுமாகிய ஆறும்; இவள் பின் அடைதற்குரிய பெதும் பைப்பருவ முதலிய ஆறையும் குறிப்பித்தபடி.

159. சீறும் - மன்மதனைச் சீறிய.

160. விழி - நெற்றிவிழியை. பண்டைப்பழி - முன்னம் மன்மதனை யெரித்தது.

பூத்தறியாப் பூங்கொம்பு போகமறி யாப்பைங்கூழ்
கோத்தறி யாத குலரத்னம் - ஏத்த 162
விரித்தறியாத் தோகைமயில் வெண்பாலு நீரும்
பிரித்தறி யாதவன்னப் பிள்ளை - மரித்தறியா 163
மைதிகழு நீலகண்டன் வாழ்கின்ற புட்பவனம்
எய்திவிளை யாடா விளஞ்சுரும்பு - வைதிகநூல் 164
நேசன் றிருக்கரத்தி னின்றுந்தென் புட்பவன
வாசஞ் செயக்குதித்த மான்கன்று - வீசியவாட் 165
போரறி யாத பொலங்குழையாண் மன்மதனூற்
பேரறி யாத பிராயத்தாள் - வார்வீழ்த்த 166
கொங்கையைச்செப் பென்றுவைத்துக் கொண்டுவிளை யாடமட
மங்கையரைக் கேட்டு வருந்துவாள் - தங்குமணிச் 167
செய்யசுவர்ச் சித்திரத்திற் றீட்டுகத லிக்கனியைக்
கையிற் கிளியருந்தக் காட்டுவாள் - ஐயமறப் 168
பூசைவரக் கண்டோடிப் போயோ வியப்புறவை
ஆசையுடன் கூட்டி லழைத்தயர்வாள் - வீசுமுன்றில் 169
வெள்ளைக் கதிர்நிலவை வெண்பா லெனப்பளிக்கு
வள்ளத் தினின்முகந்து வாய்வைப்பாள் - விள்ளும் 170
படிசே றிருலிற் படுகோது நீக்கி
வடியாத தேன்மழலை வாயாள்—கடியாமுன் 171
பல்லைவிடப் போகாப் பணிநஞ்சு போலத்தன்
எல்லைவிடப் போகா விருவிழியாள் - தொல்லபர 172

---

162. போகம், சிலேடை. கூழ் - பயிர்.

163. கலாபத்தை விரித்தறியாத. மரித்து அறியா - இறந்தறியாத; "எல்லா முடையா னிறத்தல் பிறத்தலிரண், டில்லானென் றெல்லாரு மேத்தெடுப்பான்" (திருவிடை. 461)

165. நேசன் - சிவபெருமான். 'வாள்' என்றது கண்ணை.

161 - 5. இவ்வடிகளில், பேதையின் இளமைப்பருவத்தைப் பாராட்டிய அணிநயம் மிகஇன்புறற்பாலது.

166. வீழ்த்த - நீக்கிய. 167. கேட்டு-செப்புவேண்டுமென்று கேட்டு.

169. பூசை - பூனை. ஓவியப்புறவு - சித்திரத்திலெழுதிய புறா.

171. இறுல் - தேன்கூடு. வடியாததேன்போலும் மழலைச்சொல்.

172 - 3. அபரபக்கம் - பின்பக்கம். பயப்பய = பையப்பைய-மெல்ல மெல்ல.

பக்கக் கலைகள் பயப்பயப் போய்த்திரும்ப
ஒக்க நிறைந்தனைய வொண்ணகையாள் - மிக்கமுத்தி 173
நாட்டினுமா ரூர்விரும்பு நாவலூ ரன்மணம்போற்
கூட்டினுங் கூடாத கூந்தலாள் - வீட்டில் 174
நிறைந்த திருநெடுமா னீள்செவியி னுள்ளே
மறைந்த மதுகயிட வர்போல் - பெறும்பிரண 175
வத்தி லடங்கு மறைபோற் றதீசிசரீ
ரத்தி லடங்குவச்சி ராயுதம்போற் - சூத்திரத்தின் 176
மேலொரு நாளொருத்தி மெய்யிற் கனல்வேந்தன்
சால வொளித்த தகைமைபோல் - வாலிதனை 177
எய்ய மறைந்த விராமன்போற் றேன்றிவர
மெய்யின் மறைந்த வியன்முலையாள் - துய்யநிறம் 178
துன்னு பளிக்குமுன் றிற் றேன்றுநிழற் பாவைதனை
இன்னுயிர்ப் பாங்கி யெனக்கொண்டு - தன்னகத்தில் 179
சிற்றி லிழைத்தயருஞ் சேயிழையா ளங்கவளை
மற்றெரு கைத்தாய் மடியிருத்தி - முற்று 180
அழகு தரக்கனிந்த வாரமுதச் செவ்வாய்
மழலை மொழிதிருந்தும் வண்ணம் - பழையமறைப் 181
பூவண மென்றுநிறை பூவணங்கோ யில்கொண்ட
தீவண மேனிச் சிவனென்றும் - காவணவும் 182

---

173 - 4. முத்தியுலகத்திலும் சிறந்ததாகத் திருவாரூரை விரும்பிய நாவலூரன்-சுந்தரமூர்த்திநாயனர். சுந்தரமூர்த்திநாயனருடைய மணம் முன் கூட்டமுயன்றும் பின்கூட்டப்படாமற் போனமை ஈண்டு உவமம். வீட்டில் - பிரளயகாலத்தில்.

175. மதுவும் கைடவனும் ; இவ்விருவரும் அசுரர்.

176. மறை - வேதம். ததீசிமுனிவருடம்பில் வச்சிராயுதமடங்கியிருந்தமை திருவிளையாடல், இந்திரன் பழிதீர்த்தபடலத்தால் அறியலாகும். சூத்திரம் - வஞ்சனை.

177. ஒருத்தியென்றது ஔரவமுனிவரின் தாயை ; வடவைத்தீ முதலியவற்றின் காரணமாகிய கடுங்கோபத்தையுடைய அம்முனிவரை அவர் தாய் நெடுங்காலம் துடையுள் தரித்த வரலாறு ஈண்டு அறியற்பாலது ; பாரதம், ஆதிபர்வம், 196-ஆம் அத்தியாயம் பார்க்க.

182. "ஆவண வீதிப் பூவணங் கோயில்கொண்டாயே" என்பது கருவூர்த்தேவர் திருவிசைப்பா ; 1 - 7. கா அணவும் - காத்தல் பொருந்திய ; சோலையையொத்த.

தெய்வப் பலாவென்றுந் தெய்வப் பலாவடியில்
சைவப் பொருளாந் தவமென்றும் - துய்யதிரை 183
வையைநதி யென்று மணிகர் ணிகையென்றும்
ஐய னிடம்பிரியா வம்மையென்றும் - மொய்கயிலைக் 184
குன்றி லிருந்தருளுங் கோனென்றுந் தில்லைமணி
மன்றி னடம்புரிபெம் மானென்றும் - மென்றுவர்வாய்ப் 185
பைங்கிளிக்கு மென்சொற் பயிற்றுதல் போற்பயிற்றி
அங்கவள்கேட் டுண்மகிழ மவ்வெல்லை - எங்குமொரு 186
தாய்வயிறு காணுத் தருமத் திருவுடம்பை
வேய்வயிறு கண்ட வியன்பதியும் - காவிரிவாய்ச் 187
சீருருவப் பேருருவச் செந்தீத் திருவுருவம்
நீருருவ மாக நிகழ்பதியும் - ஒருமையால் 188
ஆர்க்குந் தெரியா வருமைத் திருமேனி
சேர்க்குந் தழும்பிருந்த சீருரும் - ஏர்க்குமறை 189
தேற்றுமயன் காணுத் திருமுடியை வையைப்பே
ராற்றின் மணல்கண் டறிபதியும் - போற்றுநெடு 190
மாய னறியா மலர்ப்பாதம் பொன்னனையாள்
தூய மனையறியுந் தொன்னகரும் - மேயபிரான் 191
தேவர் நெருங்கத் திருத்தேர்ப் பவனிவரல்
தாவி றிருச்சின்னந் தானிசைப்பப் - பாவையன்னை 192
முன்செலப்பின் சென்றுகர முன்குவிக்கப் பின்குவித்து
நன்குதுதிக் கத்துதித்து நாடிய - பின்பேதை 193
கைத்தா யரைப்பார்த்துக் காண்டகு சோதிதரும்
இத்தேரி லார்சொல் லெனக்கேட்டாள் - அத்தேரில் 194

---

183. துய்ய - தூய; "துய்ய மாமதி யனைய" (பிரபுலிங்க. கைலாய. 45)

187. திருநெல்வேலி.

188. இறைவனது தீயுருவம் நீருருவமானதலம் திருவானைக்கா; செழுநீர்த்திரளென்பது அத்தலத்தில் இறைவன் திருநாமம்; "தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச் செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே" (தே. திருநா.)

189. திருக்காஞ்சி. 190. மதுரை.

191. திருப்பூவணம். 192. பவனிவரலை.

தேவி வளர்த்ததிருத் தெய்வப் பலாவடியில்
மேவிப் பழுத்த வியன்கனியென் - ருவலுற 195
மாது தனக்குரைப்ப மற்றதனைத் தாருமெனக்
காதலுடன் கேட்டழுது கண்பிசையப் - பேதைகேள் 196
இந்தக் கனியெவர்க்கு மெட்டா நறுங்கனிகாண்
முந்தப் பழமறையீ மொய்ப்பதுகாண் - சந்ததமும் 197
ஒன்ருய்ப் பலவா முருவிற் பொருந்தியெங்கும்
நன்ருய்ப் புறம்புமுள்ளு நண்ணுங்காண் - குன்ருத 198
பாவு மலையிற் பசுந்தே னுடன்கலந்தங்
கோவில் கருணைரச மூறுங்காண் - மேவுமன்பர் 199
உள்ளத் தினிக்குங்கா ணேர்பொன் னனையாட்குக்
கிள்ளப் பழுத்துக் கிடக்குங்காண் - விள்ளும் 200
பெரிய முகுந்தப் பிரமா தியர்க்கும்
அரிய பழங்கா ணணங்கே - பரிவகனீ 201
என்னும் பொழுதி லிரதமேற் கொண்டிருக்கும்
பன்னுங் கருணைப் பழமகல - அன்னையரும் 202
அந்தக் கனிந மகத்தி லிருப்பதென
இந்தக் கனியையிற்கொண் டேகினர் - வந்தமதன் 203
என்றுஞ் சிறியார்க் கினியதுகாட் டாரெனத்தன்
வன்றிண் சிலையை மறைத்தகன்ருன் - துன்றும் 204

பெதும்பை

கரையற்ற பெண்மைக் கவின்சிறிது காட்டும்
உருவப் பெதும்பை யொருத்தி - இருள்போய்ப் 205
புலர்ந்தும் புலராப் பொழுதிற் சிறிதே
அலர்ந்து மலரா வரும்பு - கலந்தன்பு 206

---

195. 28 - 29 - ஆம் கண்ணிகளின் குறிப்பைப்பார்க்க.
196. அதனை - அப்பலாப்பழத்தை. 197. மறையாகிய ஈ.
199. மலையிற்பசுந்தேன் - உமாதேவியார்.
202. இரதம் - தேர்; ரஸம். கருணைப்பழம் - சிவபெருமான்.
203. அகம் - மனம்; வீடு. இந்தக்கன்னியை.
204. சிறியார்க்கு என்றும் இனியதுகாட்டார்.

கூரவருந் தாய்சமைத்த கூட்டிற் கிடவாத
தேரு மிழாத சிறுகிள்ளை - சீரியதன் 207
கார்க்குஞ் செனவளர்த்த காகவன் புண்மருண்டு
பார்க்கநிறங் காட்டும் பசியகுயில் - ஏர்க்க 208
நிறைந்து விடும்பாலு நீரும் பிரிக்க
அறிந்துமறி யாப்பருவ வன்னம் - உறைந்துதனி 209
மேவி யிருந்தினிமேல் வேண்டு முறைபார்க்கப்
பூவின்மத னூற்பாடம் போற்றுவாள் - பாவையுமை 210
ஆர்த்த சரவணத்தி லண்ணலுருக் கூட்டுதல்போல்
சேர்த்திகுழை கூட்டுந் திருக்குழலாள் - கூர்த்து 211
வியனீரிற் ருயுடன்போய் மென்மெல நீந்தும்
கயல்போற் புடைபெயர்ச்சி காட்டி - அயலவரைத் 212
தெட்டும் புரட்டுந் திருட்டும் புகுந்துகொலை
மட்டும் புகுதா வரிவிழியாள் - எட்டரிய 213
அண்டபகி ரண்ட மளக்கத் திருநெடுமால்
கொண்டகுறள் போன்முகங்கொள் கொங்கையாள் -
[திண்டிறல்வேள் 214
கூடு மிளம்பருவக் கோலத்தி லேறிவிளை
யாடுசிறு தேரனைய வல்குலாள் - தோடுருவும் 215
அத்திரக்கண் மங்கையரு மாடவருஞ் செய்கலவி
சித்திரத்தி னல்லாற் றெரிந்திடாள் - மெத்தவுரு 216

---

207. கிடவாத கிள்ளை, தேரும் இழாத கிள்ளை யென்க; கிளி மன்மதனுடைய தேருக்குக் குதிரையாகக் கூறப்படும்.

208. காக்கையின் கூட்டிற் குயிற்குஞ்சு வளர்தல் இயல்பு.

210. பூவில் - பூவாகியலில்; "பூவிற், கையதே மலர்வாளிக் காளை" என்பர்; திருவிளை. 23 : 25.

210 - 11. உமாதேவியார், முருகக்கடவுளுடைய ஆறு திருவுருவத்தையும் ஒன்ருகக் கூட்டினமை ஈண்டுவமம்; "சீறியெரி, ஊட்ட மதின் மூன் றுழி நிகழ்ந்த வண்ணம்போற், கூட்டி முடிக்குங் குழலினள்" (ஏகாம்பர. 223-4); "சண்பை, நாட்டிறைவ ருரெண் ணகத்தமண ரைச் செயல்போற், கூட்டி முடித்த குழலினள்" (திருவிடை. 375 - 6)

213. தெட்டும் - வஞ்சிக்கும்.

215. தோடு உருவும் - காதணியை உருவிச் செல்லும்.

78617
O-,14LKY,T
N56

அன்னச் சிறுநடையா லாலிங் கனவனப்பால்
கன்னிக் கொலேசிறிது கைவந்தாள் - மின்னும் 217
சுதைநிலா முற்றத்துத் தோழியருந் தானும்
புதியகுட நீர்வார்த்துப் போற்றிப் - பதமறிந்து 218
தன்னேவளர்க் குஞ்செவிலித் தாய்போ னிதம்பேணி
மன்னி வளர்க்க வளர்முல்லே - அன்னதுதான் 219
தன்சிறுபற் போலரும்பு தான்படைப்பக் கண்டுசிறந்
தன்பு மலர வகமலர்ந்து - முன்பணியும் 220
தாதிய ரேவல்செயத் தாயர் களிதூங்க
மேதகு பல்லியம்வாய் விட்டார்ப்பப் - போதவிழும் 221
கோதை புதுவிழாக் கொண்டாடித் தன்பருவ
மாதருட னங்கண் மகிழ்போதின் - மோதுபனி 222
மொய்வந்த தென்னிமய முல்லேக் கொடிபடர்ந்த
செவ்வந்தி வண்ணச் சிவக்கொழுந்து - மெய்வரைவிற் 223
கோட்டுந் திருப்புயத்திற் கொன்றையொடுஞ் சொன்மாலே
பூட்டுந்தே வாரப் புலவர்களும் - நாட்டுபுகழ்த் 224
தென்னந் தமிழிற் றிருவா சகப்புலவன்
என்னும் பெரியவன்பி னெங்கோனும் - பொன்னலரும் 225
செந்தா திலங்குந் திருக்கொன்றை வேணியர்மேல்
அந்தாதி பாடியவென் னம்மையும் - நந்தேவர் 226
வீதி யுலாங்கயிலே வெற்பி லரங்கேற்றும்
ஆதி யுலாவுரைத்த வன்பனும் - சோதிமலேப் 227

---

217. முதலிற் செய்யும் போரைக் கன்னிப்போரென்றும், முதல் வேட்டையைக் கன்னிவேட்டை யென்றுங் கூறுதல் மரபாதலின், 'கன்னிக் கொலே' என்ருர்.

218. பதம் - காலம். 219. முல்லேயாகிய அன்னது.

219 - 22. "அல்லியங் கோதை மாத ரன்பொடு வளர்த்த முல்லே, மெல்லரும் பீன்ற தென்ளு விழாவயர் முழவு" (நைடதம், நாட்டு. 18)

224. திருஞானசம்பந்தர் முதலிய மூன்று நாயன்மார்கள்.

225. "தென்னந் தமிழினுடன் பிறந்த சிறுகால்" (மீனுட்சியம்மை பிள்ளேத்தமிழ், தாலப். 1). எங்கோன் - ஸ்ரீமாணிக்கவாசகர்.

226. அந்தாதி - அற்புதத்திருவந்தாதி. அம்மை - காரைக்காலம்மையார்.

227. அன்பன் - சேரமான் பெருமாணுயனுர்.

பெண்பாகங் கொண்ட பிரான்மெய்ப் பதிதோறும்
வெண்பாவி ஞற்புகழ்ந்த வேந்தனும் - பண்பாப் 228
பிரமனைமுன் ஞட்சிரங்கொள் பெம்மானுக் கன்பாய்ப்
பரமனை யேபாடு வாரும் - மருதிடங்கொள் 229
பைம்மணிக் கோவைப் பணியா பரணர்மேல்
மும்மணிக் கோவைசொன்ன மூர்த்தியும்-தம்முருவாய் 230
வாழ்வாரும் வாழ்த்தி வருவாரு மெய்யுருகிச்
சூழ்வாரு மெம்மருங்குஞ் சூழ்ந்துவரத் - தாழ்வில்லாத் 231
தெய்வப் பலாவின் றிருநீழல் வீற்றிருப்போன்
சைவத் திருவீதி சாருதலும் - மையற் 232
செயல்சற் றறிவிழியாள் சேயிழையா ரோடும்
இயலுற் றெதிர்போ யிறைஞ்சிக் - கயிலைக் 233
கிரிக்கு ளமர்ந்தபிரான் கேசாதி பாதப்
பரப்பி னழகையெலாம் பார்த்தாள் - ஒருத்தி 234
தபோபலம் வாய்த்தபெருஞ் சாட்சிக் கிருந்த
கபோல நகக்குறியைக் கண்டாள் - சுபாவம் 235
தெரிந்தமட வீரிந்தத் தேவர் கபோலத்
திருந்தகுறி யென்னகுறி யென்ருள் - திருந்துகுயிற் 236
பிள்ளையே யெங்கடவப் பேறே வரிவளைக்கைக்
கிள்ளைநீ யின்னமிது கேட்டிலையோ - தெள்ளுகடல் 237
வண்ணனறி யாப்பதமில் வாயில் வரத்தவஞ்செய்
பெண்ணமுது கைபடைத்த பேறுகாண் - எண்ணில் 238
அருவுருவ மில்லா வரனைக் கருணைத்
திருவுருவஞ் செய்தாள் செயல்காண் - இருநயனம் 239

---

228. வேந்தன் - ஐயடிகள் காடவர்கோனயனர்; இவரருளிச்செய்த வெண்பா கேத்திரத்திருவெண்பா.

229. மருது இடங்கொள் - மருதமரத்தின் அடியை இடமாகக் கொண்ட; "மருதிடங் கொண்ட மருதமா ணிக்க" (திருவிடை - மும் மணி. 22)

230. மும்மணிக்கோவை - திருவிடை மருதூர் மும்மணிக் கோவை. மூர்த்தி - பட்டினத்துப்பிள்ளையார்.

234. ஒருத்தி - பொன்னனையாள்.

235. கபோலம் - கன்னம். பொன்னனையாளின் நகக்குறியை.

238. பதம் -இறைவன் திருவடி. பெண்ணமுது-பொன்னனையாள்.

துள்ளிமுத்தங் கொள்ளமனந் தூயதிருப் பொன்னனையாள்
அள்ளி முத்தங் கொண்டவடை யாளங்காண்-ஒள்ளிழையாய் 240
கண்டருணீ யென்னவுட்கொள் காதல் புறந்தெரியக்
கொண்ட புளகக் குறிப்பெய்த - வண்டுதக் 241
கேட்டு மலருங் கிளர்தா மரைமுகைபோல்
ஈட்டிய செவ்வி யெழில்படைத்தாள் - மீட்டிவளைப் 242
பார்த்ததும் பாரா ததுவுமாய்ப் பைங்கொன்றைத்
தீர்த்தனு மந்தத் தெருவகன்றான் - ஆர்த்த 243
சிறுநா ணுறுமடமின் செய்கைதெரி வில்வேள்
சிறுநா ணொலிதுலக்கிச் சென்றான் - மறுதெருவிற் 244

மங்கை

சட்டமிடும் வில்வே டளநா யகப்பட்டம்
கட்ட வளர்ந்த கவின்மங்கை - முட்டவசைந் 245
தார வளைந்துதுவண் டாடுமிடை யுங்கருத்தும்
பார மறிந்த பருவத்தாள் - வீரமிகும் 246
வாட்கைக் குமரருக்கு மையற் பிணிகொடுத்து
மீட்கத் தெரியும் விழியினாள் - வேட்கைதரும் 247
வானிற் சுரபியின்பால் வண்மையுடைக் கற்பகப்பூந்
தேனிற் கலந்தனைய செவ்விதழாள் - மேனிற்கும் 248
காருலவு தண்ணங் கடல்போ லகன்றுபரந்
தாரமுதங் கொப்புளிக்கு மல்குலாள் - சோர்வுதர 249
வன்போர் புரிபொருவின் மன்மதன்ற னூலினுக்குப்
பொன்போ லுரையறிந்து பூரிப்பாள் - என்பிறவி 250
எண்ணைப் பறித்தெறியு மீசன்போன் மாலானார்
கண்ணைப் பறித்தெறியுங் காட்சியாள் - வண்ணத் 251

---

240. துள்ளி - முத்தம் - நீர்த்துளியாகிய முத்தத்தை.
244. நாண் - நாணம், நாணி. 245. தளம் - சேனை.
246. பாரம் - கனம், பிறருடைய வருத்தம்.
247. "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக் கொன்றந் நோய் மருந்து" (1091) என்னும் திருக்குறளை இங்கே அறிக.
248. "பாலொடு தேன்கலந் தற்றே" என்பது திருக்குறள், 1121.
250. பூரித்தல் - நிறைத்தல்.
251. மாலானார் - திருமால் மயக்கமுடையவர்.

திருமுகத்தெய் வீகநிறச் செந்தா மரையும்
மருமுகக்குங் கூந்தனிற வண்டும் - கரியவிழி 252
ஆர்ந்தநீ லோற்பலமு மாம்பல்வாய்க் கிஞ்சுகமும்
சார்ந்த திருநிறத்துச் சண்பகமும் - பூந்தரள 253
மாலை முலைக்கோங்கும் வாய்ந்த நகைத்தளவும்
கோல மினிய கொழுங்குமிழும் - நூலினிடை 254
வல்லியுஞ் செங்கை மலர்க்காந் தளுஞ்சரண
பல்லவமு மற்றெவையும் பார்த்தருளி - நல்லவர்பாற் 255
போதுதிரு வுள்ளத்துப் புட்பவனக் கோயிலார்
ஈதுமொரு புட்பவன மென்றெண்ணக் - கோதகல 256
மேய திருவழகின் மெய்யு மவயவமும்
தூய நிறத்திற் றுலங்குவாள் - சாயலியல் 257
ஒத்த பருவத் துயிர்ப்பா வையர்சூழச்
சித்திரமா மண்டபத்திற் சென்றிருந்து - முத்தமுலை 258
விம்மநைய நுண்ணிடையாள் வெண்முத்த மிட்டிழைத்த
அம்மனை வாங்கியெறிந் தாடவவை - தம்ம 259
திருமுகச் செவ்விதிரு டத்திகழ்விண் டிங்கள்
வருவதுவும் போவதுவு மான - விருகை 260
வனச மலர்மாறி மாறிவிளை யாடும்
இனியகளி யன்னங்க ளென்னப் - புனைகுழற்குத் 261
தோற்ற முகிறிறையாத் தூமுத்தின் பந்துநிரை
போற்றிவர விட்ட புதுமையென - வேற்றதனைக் 262
கொள்ளா தெடுத்தெறியுங் கொள்கையென விண்முகில்பின்
தள்ளாது மீளத் தருவதென - வள்ளல்பால் 263
தூதுவிடு மன்னமெனத் தொலைலயனங் காணுத
நாதனென மீளு நலமென்ன - மாதரசி 264

---

253. கிஞ்சுகம் - முண்முருங்கை. நிறமாகிய சண்பகம்.
254. தளவு - முல்லை. நாசியாகிய குமிழம்பூவும்.
255. பல்லவம் - தளிர்.
252 - 6. இக்கண்ணிகளில் மங்கையைப் புட்பவனமாக உருவகித்திருக்கின்றனர்.
257. நிறத்தின் - நிறத்தோடு. சாயல் - மென்மை. இயல் - நடை.
259. தோழியரையும் உளப்படுத்தி, 'தம்ம' என்றார்.
262 - 3. அதனை ஏற்றுக்கொள்ளாது.

அம்மானை யேந்துகரத் தம்மானை யேபாடி
அம்மானை யாடு மளவிலே - பெம்மான்சூழ் 265
காராழித் தேர்முதுகு காட்டக் கதிர்வெய்யோன்
ஓராழித் தேரொதுங்கி யோட்டெடுப்பக் - கூராழி 266
பாதலக் கங்கை படியநெடுங் கூவிரம்போய்
மீதலக் கங்கை மிசைப்பொங்கப் - போதருதேர் 267
மேல்வெண் டுகிற்கொடிகள் விண்ணஞ் சுரநதியின்
பால்வெண் டிரைபோற் படிந்தாடச் - சேல்கொண் 268
டுருக்குந் திருக்க ணுமையம்மை பாகத்
திருக்குந் திருப்பூவ ணேசன் - திருக்கொன்றை 269
மாலை யழகன் வரும்பவனி தானுரைக்கும்
வேலைதிரு வம்மனைகை விட்டெறிந்தாள் - சேலை 270
இடைக்கு ளிறுக்கி யெழுந்தாணற் ருயர்
பிடிக்கப் பிழைத்துப் பெயர்ந்தாள் - தடுக்கும் 271
செவிலியர்க்குந் தப்பித் தெருவிற் புகுந்தாள்
நவிலியற்கை வாசமலர் நங்கை - சிவபிரான் 272
தெய்வத் திருமார்புந் திண்டோளும் பொன்னனையாள்
கைவைக்குங் கோலக் கபோலமும் - சைவத் 273
திருநீறு சண்ணித்த தெய்வச்செம் மேனி
அருணீர்மை குன்ரு வழகும் - பெருவாழ்வு 274
பெற்றதுபோற் கண்டு பெரிதிறைஞ்சிக் கண்பனிப்ப
முற்றுமுடல் பூரிக்க முன்னின்று - நற்றவர்சேர் 275

---

265. அந்த மானை ஏந்திய திருக்கரத்தையுடைய அம்மான் - சிவபெருமான்.

259 - 65. இவ்வடிகளில் மங்கை அம்மானை யாடுதல் கூறப்படுகின்றது. முத்தாற்செய்யப்பட்டனவாதலின், அம்மானைக்குத் திங்களும் அன்னங்களும் முத்தின் பந்தும் உவமை கூறப்பெற்றன.

265 - 6. காராழி சூழ்தேர் - கரியகடல் சூழ்ந்த பூமியாகிய தேர்.

267. கூவிரம் - தேரின் மேன்மொட்டு. 'கூவிரிபோய்' என்றும் பாடம்; "கூவிரியால் விண்விரியக் கூரா ழிகள்பதிந்து, பாவிரி சேடன் படம்விரிய" என்பது தேவையுலா, 304.

272. இயற்கைவாசம் - இயல்பாகவேயுள்ள நறுமணம்; வாசம் - வசித்தலுமாம்.

274. சண்ணித்த - பூசிய ; "மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் ருடொ ழாதே" (திருநா. தே. ஆரூர்)

விண்ணார்ந்த வெள்ளிமலை மேலிருக்குஞ் செந்தேனுக்
கண்ணார்ந்து பார்த்து ளயர்வுற்றாள் - தண்ணார் 276
விதுக்குடி யேறுசடை வேதியன் மோகம்
புதுக்குடி யேறுநெஞ்சு பூண்டாள் - மதுக்குமிழி 277
செற்றிய வெண்டரளச் செங்கனிவாய் நெஞ்சத்துள்
உற்றதுயர் பாங்கியருக் கோதினாள் - மற்றவரும் 278
பொன்னே கிளியே புதுமயிலே யன்னமே
மின்னே மதன விசயமே - அன்னைக் 279
கொடியார் தடுத்த கொடுஞ்சகுன மீதென்
றுடனே குயிலுக் குரைத்தார் - மடவரலும் 280
மற்றதுமெய் யென்று மயங்கி யறிவழிந்து
பொற்றொடி வீழப் புலம்புற்றாள் - முற்றும் 281
உரியார் கடைக்கணித்த தூங்குவட்கோ வேட்கோ
தெரியா தெனவயிர்க்கச் சென்றார் - பொருவேள் 282
மதுவிருந்த மென்சாப வாளியின் வாய்க்குப்
புதுவிருந் தாயினாள் பூவை - மதியார் 283

மடந்தை

இனத்தைப் பொருவே ளிரதிமேல் வைத்த
மனத்தைத் திருப்பு மடந்தை - வனத்தவகில் 284
ஆவி முடித்திளைஞ ராவி முடிக்கவெனச்
சீவி முடித்த திருக்குழலாள் - பூவுலகில் 285
ஆற்றுவன் காமுகர்த மாயுணா ளெண்ணியெண்ணிக்
கூற்றுவன்பார்க் கப்பார்க்குங் கூர்விழியாள்-சாற்றரிய 286
கைசிவக்கக் காமவேள் கண்சிவக்க வாடவர்தம்
மெய்சிவக்க வாய்சிவக்கு மெல்லிதழாள் - மொய்முனிவர் 287

---

277. விது பிறை.

280. கொடியார் - கொடுமையை யுடையார், காக்கை. 'தடுக்குஞ் செவிலியர்' என்றார் முன் ; 271 - 2. காக்கைதடுத்தாற் செல்லலாகாதென் பது விதி ; "வடித்தெடுத்த வேற்கண் மணியிரண்டு கொண்ட, கொடித் தடுத்தாலாரே குவார்" (தமிழ்நா.) என்பதிலும் இச்சிலேடைப் பொரு ளமைந்திருத்தல் காண்க.

282. உரியார் - உடையார். அயிர்க்க - சந்தேகிக்க.

283. மதுவிருந்த சாபம் - கரும்புவில்.

285. ஆவி - புகை, உயிர்.

சாபம் பறக்கத் தவம்பறக்க மால்பிறக்கச்
சோபம் பெறப்பிறக்குஞ் சொல்லினாள் - கோபமதன் 288
போர்வளர நாணாசை போய்வளரப் பேராசை
வேர்வளர மேல்வளரும் வெம்முலையாள் - தேர்மலயக் 289
கால்வளைய வேள்சிலைவன் கைவளைய வாடவரை
மால்வளையப் போய்வளையும் வாணுசுப்பாள் - மேல்வருமன் 290
புள்ளூற வாசைகிடந் தூற்றூற வாயூற
வள்ளூ றமுதூறு மல்குலாள் - துள்ளுவிழி 291
சுற்றமனஞ் சுற்றமனந் தூயோர்க்கு மாசைதலை
சுற்றவுடை சுற்றுந் துடையினாள் - வெற்றிமதன் 292
தேர்நடக்க மூன்றுலகுஞ் செங்கோ னடக்கமிகும்
போர்நடக்கத் தானடக்கும் பொன்னடியாள் - சீர்நடக்கும் 293
தெண்ணிலா முற்றத்திற் சென்றிருப்ப வோர்விறலி
எண்ணிலா நேயத் தெதிர்நின்று - கண்ணிலான் 294
கண்பெற்ற தென்னமதன் கைகுவிக்குந் தெய்வமே
மண்பெற்ற செல்வ மடந்தையே - பெண்பெற்ற 295
பேறே யெனவாழ்த்தப் பெண்ணரசி கொண்டாடி
வீறு ரிசையின் விறலியே - ஆரூர் 296
திருக்கங்கை வார்சடையார் தென்பாண்டி நாட்டில்
இருக்குந் தலங்கள்பா டென்னப் - பெருக்கம் 297
திகழ்பூ வுலகிற் சிவலோக மென்னப்
பகர்கூட லாலவாய் பாடி - மிகமால் 298
பிறிக்கு மடியார் பிறவிக் கருவேர்
பறிக்கும் புனவாயில் பாடிக் - குறிக்குமால் 299

---

288. சோபம் - க்ஷோபம் (கலக்கம்) ; இரத்தத்தைக் குறைக்கும் ஒரு வகைநோயுமாம் ; "கோப மதனாலே குறையுயிருங் கொள்ளைகொள்ளும், சாபமத னாலே தயங்கினேன் - சோபமனத்து" (வருணகுலா. 444) என்பதனாலுணர்க.

289 - 90. தேர் மலயக்கால் - மன்மதன்தேராகிய தென்றல்.

291. அள்ளூறு - மிக்கு ஊறுகின்ற,

296. வீறு : வேறொன்றற்கில்லாத அழகு.

297 - 311. இக்கண்ணிகளிற் பாண்டிநாட்டுச் சிவஸ்தலங்கள் 14-ம் கூறப்பெற்றுள்ளன.

298. "புத்திதரும் பூவுலகிற் சிவலோகம்" (திருவிளை. தல விசேட. 21)

299. பிறிக்கும் - பிரிக்கும்.

சங்கந் திகிரி தணந்துமழு மானெடுக்கும்
நங்கள்குற் ருல நகர்பாடித் - தங்கொருபால் 300
பெண்மைத் திருக்கோலப் பெம்மா னினிதுறையும்
உண்மைத் திருவாப்ப னூர்பாடித் - திண்மையற 301
வாட்டும் பிறவி வழிமறித்து ஞானவழி
காட்டுந் திருவேட கம்பாடி - நாட்டில் 302
விரவுதிரு வெண்ணீற்றின் மெய்யன்பர் கூட்டம்
பரவுதிரு நெல்வேலி பாடிப் - புரவுமுனே 303
சேர்திருவி ராகவன்முன் சேனையுடன் கண்டுதொழச்
சார்திருவி ராமேச் சரம்பாடி - ஏர்தருபொற் 304
கொம்பரனு டானையொரு கூறிலங்குங் கோலத்து
நம்பரனு டானை நகர்பாடி - வம்பர் 305
புரங்குன்ற வாணகைசெய் பொன்மலைவிற் செல்வன்
பரங்குன்ற மாநகரம் பாடி - உரங்கொள் 306
விடைக்குஞ் சரமுகைப்பார் வீற்றிருக்கக் காணி
படைக்குந் திருச்சுழியல் பாடிக் - கிடைக்குமகத் 307

---

300. திருக்குற்ருலத்தில் அகத்தியமுனிவரால் திருமால் சிவபெருமான் வடிவம்பெற்றனர் ; இதனை, "முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப் பெரிய துழாய் முடியின் மீதே, சிறியமதிக் கலைகுறுகத் திலகநுதல் விழிகுறுகச் செழும்பூண் மார்பி, னிறை யரவப் பணிகுறுக நிகிலவுல கமுநிறைந்து நீண்ட மேனி, குறுகுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறுமுனிவன் குறுகுங்காலை", " தவம்பெருக வறம்பெருகப் பொருள்பெருகத் தெருள்பெருகச் சைவமோங்கிச், சுவம்பெருக மனுநீதித் துறைபெருக நிறைபெருகச் சுருதி வாய்மை, நவம்பெருகச் சரியாதி சதுட்டயங்க ணனி பெருக ஞால மெல்லாம், சிவம்பெருகக் குறுகியருள் பெருகினுன் குற்ருலத் தேவ தேவன் " (திருக்குற்ருலப். திருமால் சிவ. 142-3) என்னும் அருமைச் செய்யுட்களாலுணர்க. இக்கதை, கந்தபுராணம், திருக்குற்ருலப் படலத்துமுள்ளது; "மன்றி னருகு மலர்த்துழாய் நாறுமிடம், கொன்றை கமழ்வித்த கோத்தவனும்" (ஏகாம்பர. 91), "அலர்துழாய் நாறு மகன் றளியைக் கொன்றை, மலர்துழாய் நாறவைத்த மானும்" (திருவிடை. 215)

305. கொம்பர் அன்னுள்தான் - உமாதேவியார். ஐ ஒருகூறு - அழகிய ஒருபாகத்தில்.

307. விடைக் குஞ்சரம் - இடபமாகிய யானையை. காணி-உரிமை ; "படர் சடையர் காணியெனலாம்......மயிலாடுதுறையே" (திருஞான. தே.) அகம் - மனம்; மகமெனப் பாடங்கொண்டு யாகமென்றுங் கொள்ளலாகும்.

தாசையுடைச் சிற்சபையி லையன் றிருச்சிலம்பின்
ஓசையுடைத் திருப்புத் தூர்பாடித் - தேசு நலம் 308

தாங்குதிருத் தேர்வீதிச் சைவா கமம்வேதம்
ஓங்குதிருக் கானப்பே ரூர்பாடி - வாங்கும் 309

தனிக்கொடுங் குன்றமதன் றன்னை யெரித்தார்
பனிக்கொடுங் குன்றநகர் பாடித் - தொனிக்குமறைப் 310

பாவணம் பாடும் பரமன் றிருக்கோயிற்
பூவணம் பாடும் பொழுதிலே - நாவணங்கு 311

நாதன் புதல்வர் நவினுன் மறைபாடக்
கீத விசைகின் னரர்பாடக் - கோதிலாச் 312

சூழிசை வீணைகொடு தும்புரு நாரதர்தாம்
ஏழிசை ராக வியல்பாட - வாழ்முனிவர் 313

பன்னியர் பல்லாண்டு பாடத் தருநாட்டுக்
கன்னியர் தேவகா னம்பாட - இன்னிசையால் 314

தெய்வப் புலமைத் திருமு தலிமூவர்
சைவச் சுருதித் தமிழ்பாட - உய்விக்கும் 315

---

308. தாண்டவமேழனுட் கௌரீதாண்டவத்தைத் திருப்புத்தூர்ச் சிற்சபையிற் பரமசிவன் அம்பிகைக்குக் காட்டியருளினர்; இது, **திருப்புத்தூர்ப் புராணம்**, கௌரீதாண்டவச் சருக்கத்தால் தெரிகின்றது; பாண்டிபதி ஞலின்மிக்காப் பண்ணடமே ழிற்கௌரி, தாண்டவஞ்செய் சிற்சபையிற் றங்கினேன்'' என்பது, திருப்புத்தூருலா, 337.

309. திருக்கானப்பேர் - காளையார்கோயில். வாங்கும் - வளைக்கும்.

310. தன் இக்கொடும் குன்ற - தன்னுடைய கரும்பு வில்லோடும் குறைய. கொடுங்குன்றம் - பிரான்மலை.

311. பாவண்ணம் - பாக்களின்வண்ணம். நா அணங்கு - கலைமகள்.

298 - 311. இக்கண்ணிகளிற் பாண்டி நாட்டிலுள்ள பதினன்குதலங்களும் திருப்பதிக்கோவையிலுள்ள முறைப்படியன்றி, "கூடல் புனவாயில்குற்ருல மாப்பனூர், ஏடகநெல் வேலி யிராமேசம் - ஆடானை, தென்பரங்குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர்கானை, வன்கொடுங்குன் றம்பூவணம்'' என்னும் பழைய வெண்பாவிலுள்ள முறைப்படியே அமைந்துள்ளன.

311 - 2. நாஅணங்கு நாதன் - பிரமன்; அவன்புதல்வர் - பிருகு முனிவர் முதலியோர்.

314. பன்னியர் - பத்தினிமார். தருநாடு - தேவருலகம்.

315. திருமுதலிமூவர் = மூவர்முதலிகள் - திருஞானசம்பந்தர் முதலிய மூவர்; மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும், தேவாரம் செய்த திருப்பாட்டும்'' (ஏகாம்பர. 78) என்ருர்.

சேணுலவு தெய்வத் திருநீல கண்டயாழ்ப்
பாணர் தமிழ்மாலைப் பண்பாடப் - பூணரக்கன் 316
கைந்நரம்பிற் பாடக் கருணைபுரி வள்ளலார்
மெய்ந்நிரம்பு மாமறுகின் மேவுதலும் - சொன்னிரம்பு 317
பண்ணு ரிசைவிறலி பாடுந் தலமெல்லாம்
கண்ணுரக் கண்ட களிகொண்டாள் - பெண்ணுர் 318
அமுதமெதிர் சென்றுசெம்பொ னுலத்தி காட்டிக்
குமுத மலர்மலர்வு கொண்டாள் - விமலரே 319
என்று ளுமக்கபய மென்றுள்கண் ணீர்ததும்ப
நின்றுணின் றுடனக்கு நீராளும் - குன்றுளும் 320
மின்னிறத்த கொன்றையந்தா ரீந்தனரோ வென்றயிர்க்கப்
பொன்னிறத்தை யீந்தரனுர் போயினுர் - பின்னொருத்தன் 321
போடுங் கணை நுழைந்த புண்வழியிற் றென்றலூ
டாடுந் துயருழந்தா ளாங்கொருத்தி - சேடன் 322

அரிவை

பகைகொண்டு பண்டு விரித்த படம்போல்
அகல்கின்ற வல்கு லரிவை - உகிர்கொண்டு 323
முன்னொருகோ பத்தான் முடியரிந்த சங்கரற்குப்
பின்னொரு கோபம் பெயர்த்துவரின் - அன்னவரை 324
ஏவர் தடுப்பரென வெண்ணி யயன்பயந்து
தேவர்பெருமான் றிருவுள்ளம் - ஆவதற்கா 325

---

316. தமிழ்மாலைப்பண் - தேவார இசை. அரக்கன் - இராவணன்.

317. மெய் - உண்மை, தரிசிப்போருடைய உடம்புகள்.

318. ‘விறலி’ என்றது, 294 - ஆம் கண்ணியிற்கூறிய விறலியை. ‘பாடுந்தலம்’ என்றது, ·298 - ஆம் கண்ணி முதலியவற்றிற் கூறிய வற்றை. ஆர - குறைவின்றி நுகர; ஏதிலா ராரத் தமர்பசிப்பர்” திருக்குறள். 837)

319. குமுதமலர் மலர்வுகொண்டாள் - வாய்திறந்தாள்.

320. அபயம் - அடைக்கலம். நீராள்-கங்கை. குன்றுள் - உமா தேவியார்.

321. இன்நிறத்த - இனிய நிறத்தையுடைய. பொன்னிறம் - பசலை நிறம். ஒருத்தன் - மன்மதன்.

322. ஊடாடும் - உள்ளேசென்று துன்புறுத்தலாலுண்டாகிய.

323. பகைகொண்டு - வாயுதேவனிடம் விரோதங்கொண்டு.

மின்னைத் திரட்டி மிகப்பிழிந்து சாம்புநதப்
பொன்னை யுருக்கிப் புடமிட்டுப் - பின்னையொன்ருய்க் 326
கூட்டிப் பிடித்துக் குழைத்துமதி நுட்பமெலாம்
காட்டித் தனித்திருந்து கைவருந்தப் - பூட்டியமு 327
தூறு பருவத் தொருபெண் ணுருவாக்கிக்
கூறு மழகைக் குடியேற்றி - வீறு 328
நலமுற்ற பெண்க ணலத்திற் றெரிந்து
திலமத் தனையெடுத்துச் செய்த - நிலைபெற்ற 329
பிள்ளைக் குதலைமொழிப் பெண்ணழகு மிவ்வழகுக்
கெள்ளத் தனையு மிலையென்ன - உள்ளத்திற் 330
கங்கை வெதும்பமலைக் கன்னி கலங்கமற்ற
நங்கையர் சங்கையிலா நாணெய்தத் - திங்களணி 331
முக்கணனூர் மேனி முழுவதுங் கண்வேண்டும்
இக்கன் னியைப்பார்க்க வென்றுரைக்க - அக்கணமே 332
வண்ண மலர்வேளும் வாகை தரிக்கவெங்கள்
கண்ணுதன்முன் விட்டனைய காட்சியாள் - எண்ணிறந்த 333
பாங்கியர் நிற்கவுயிர்ப் பாங்கி யுடனேறி
ஓங்கிய செய்குன்றி னுள்ளிருத்தி - ஆங்கவட்குத் 334
தென்னூர் செழுங்களபச் சேறணிந்தா டானணிந்த
பொன்னா பரணமெலாம் பூட்டினள் - மின்னுடன் 335
பொற்பூர் சரீரத்தைப் புல்லி யகமகிழ்ந்தாள்
கற்பூர தாம்பூலங் கைக்கொடுத்தாள் - பிற்பாடென் 336
ஊனு ருயிர்நீயென் னுள்ளக் கருத்தெல்லாம்
மானே யறியாயோ மற்றென்ன - யானறியப் 337

---

329. திலம் அத்தனை - எள்ளின் அவ்வளவு.

330. பெண் - திலோத்தமை. 381. சங்கை - அளவு.

331. வெதும்பாதவள் வெம்மையுறக் கலங்காதவள் கலங்க.

(328) குடியேற்றி (333) விட்டனைய காட்சியாள்.

335. தென் - அழகு ; தெற்குமாம். களபச் சேறு-கலவைச்சாந்து.

336. " கற்பூர தாம்பூலங் கைக்கொடுத்தேன் " என்பது, வருண குலாதித்தன்மடல், 412. பிற்பாடு - பின்னுக ; " பெண்ணணி கோலம் பெயர்ந்த பிற் பாடு " (சிலப். 13 : 1)

போமோசொ லுன்கருத்தைப் பூவணங் கோயில்கொண்டார்
தாமே யறியத் தகுமென்ன - ஆமே 338
அவர றிவ துன்னேக்கொண் டல்லவோ வென்ருட்
கெவர றிவுந் தாமறியு மீசன் - அவிர்சடையான் 339
பின்னழகுக் கொப்புரையாப் பேரம் பலவாணன்
தன்னழகுக் காருமொவ்வாத் தாணுவீங் - குன்னழகு 340
பார்க்கவே நாளேப் பவனிவரு மென் றளவிற்
கார்க்குழல்கேட் டுள்ளங் களிப்பெய்தித் - தீர்த்தன்மேல் 341
ஆசை யினும்விரிவா வல்குல்பூ ரிப்பமுலே
வீசிய விண்ணே வெளியடைப்ப - மாசகலும் 342
கன்னி புளகமுறுங் காலேயின் மாலேபெற
மன்னிய காமம் வளர்ந்தேற - அந்நேரம் 343
மாலேவரக் கண்டான் மயங்கி மறலிநிறம்
சால முழுச்சிவப்போ தானென்ருள் - காலரவம் 344
போலவரக் கண்டு பொதியின் மலேப்புலியை
வாலுருவி விட்டான் மதனென்ருள் - பாலருவி 345
விட்டதுபோல் வெண்ணிலவு வீசுவதை வெண்ணெருப்பாச்
சுட்டநெருப் பேதென்று சொல்லிஞள் - முட்டக் 346
குயில்வாய் விடமிருப்பக் கூற்றுதைத்தா ரென்னே
வியல்வேலே நஞ்சுண்ட தென்ருள் - செயன்மாரன் 347
தாழை மலரணியாத் தன்பகைவன் மேலெய்யா
தேழையெனே யெய்யுமதி யென்னென்ருள் - சூழ 348

---

338. ஆமென்பது உடன்பாட்டைத் தெரிவிக்கும் ஒரிடைச்சொல்.

340. அழகுக்காருமொவ்வாதானென்பது இத்தலத்தில் நாயக ருடைய திருநாமம்.

341. தீர்த்தன் - தேவன்.

343. புளகம் - மயிர்சிலிர்த்தல். காலேமாலே யென்பவற்றிற் சிறு பொழுதுகளின் பெயர்கள் தொனிக்கின்றன.

344. கால் - தென்றற்காற்று.

345. புலியை வாலுருவிவிடலென்பது ஒரு பழமொழி; "வயப் புலியை வாலுருவி விடுகின் றீரே" (பாரதம், சூதுபோர்ச்சருக்கம், 265)

346. "அலேவாய் விடத்தி னுடன்ருேன்றி யாவி கவரும் வெண்ணெ ருப்பே" (நைடதம், சந்திரோ. 37)

உருகு மினத்தோ டுயிர்த்துயிர்த்து நெஞ்சம்
சருகுபட வாடித் தளர்ந்து - முருகிதழித் 349
தாமக் கடவுடிரு வஞ்செழுத்தே தான்புணையா
யாமக் கடனீந்தி யேறினாள் - சோமக் 350
கடவுட் சடாமவுலி காலைவரு மென்றென்
றடர்பொற் பணிதிருத்தி யாடை - இடையிறுக்கி 351
மின்னனையா ளில்கடந்து வீதிவந்தா ளவ்வளவிற்
பொன்னனை யாண்மனைக்குப் போயினோன் - தன்னனைய 352
நற்றேர் வரக்கண்டா ணாளைவரு மென்றுரைத்த
குற்றேவற் பாங்கியைமுன் கும்பிட்டாள் - பிற்றேவர் 353
தேவனைக்கும் பிட்டா டிருத்தோ ணலங்கண்டாள்
காவிமைக்க ணாற்பருகிக் காமுற்றாள் - மேவுசெக்கர் 354
மாலைத் துயரொழிய வஞ்சி வலக்கண்ணும்
காலைக் கதிர்கண்டு கைதொழுதாள் - ஆலித்துப் 355
பையவருந் தென்றற் பகைதீர வெம்பெருமான்
செய்யதிரு வாபரணஞ் சேவித்தாள் - மையற் 356
கரணும் புயத்தானை யம்புலிப்போர் நீங்கச்
சரணும் புயத்தலரிற் றாழ்ந்தாள் - முரணார் 357
வரிக்குயிலுக் கஞ்சுதொழின் மாற்றப் பெருமான்
திருக்கரத்தைக் கண்டுதரி சித்தாள் - கருப்புவிற்கை 358

---

349. இதழி - கொன்றை.

350. யாமக்கடல் - இராத்திரியாகிய கடல். இவள், திருவைந்தெழுத்தே தெப்பமாக யாமக்கடலை நீந்திக்கடந்தாள்; இது பஞ்சாக்கரத்தையே துணையாகக்கொண்டு கடலைக்கடந்த வாகீசருடைய அருஞ்செயலை நினைப்பிக்கின்றது.

353. பாங்கி நாளைவருமென்றதை, 341-ஆம் கண்ணியிற் காண்க.

355. வலக்கண்ணும் காலைக்கதிர் - சிவபெருமானுடைய வலக்கண்ணாகிய சூரியனை. ஆலித்து - முழங்கி.

356. திருவாபரணம் - பாம்பு. பாம்பு காற்றை உண்ணுமென்றல் ஈண்டு அறியற்பாலது; "வாயு வான பஞ்சடைத்துத் திருமா றுயிலு மலரணையே" (செவ்வந்திப். திருமலை. 30); "மணியுடைநும் பூணுணவு மாற்றும்விரத, நணியனகொ றென்ற னடுக்கும்" (திருவிடை. 316) என்றார்; மையற்கு - மயக்கமாகிய பகையைத் தடுத்தற்கு.

357. அரணும் புயத்தானை - காவலாகிய திருத்தோள்களையுடையவரை. தக்கன்யாகத்திற் சந்திரனைச் சிவபெருமான் திருவடியால் தேய்த்தது இங்கே உணரத்தக்கது.

358. தக்கன்யாகத்தில் இந்திரன்கொண்ட குயில்வடிவின் இறகைச்

பூணு மதனடத்தும் போர்தவிரப் புட்பவன
வாணனுதற் கண்கண்டு வாழ்த்தினள்-பாண்மிழற்றும் 359
வண்டார் குழனெருநல் வந்தபகைக் குப்பகைதான்
தண்டா வரனுருவிற் றன்கண்டாள் - கண்டோமென் 360
றுனந்த மூழ்கி யறிவுவரு முன்றிருத்தேர்
தானந்த வீதியொரீஇச் சார்ந்ததால் - ஞானந்தான் 361

தெரிவை

தேற்றமிகப் பேரின்பந் தேடுமவ ராசைக்கு
மாற்றுமருந் தென்ன வருந்தெரிவை - சாற்றயன்மால் 362
கற்பத் திருணிலவோ காய்பகலோ வென்னமிகப்
பொற்புற் றிருள்பழுத்த பூங்குழலாள் - கற்பத்துச் 363
சீலக் கடல்குளமோ சிற்றோடை யோவெனநீள்
நீலப் பெரிய நெடுங்கண்ணுள் - கோலமுந்நீர்க் 364
கண்ணற் பவளங் கறுப்போ விளர்ப்போவென்
றெண்ணச் சிவந்த விதழினுள் - விண்ணமுதம் 365
காறி யுமிழ்புளிப்போ கைப்போவென் றிந்திரன்வாய்
ஊறிவரத் தித்திக்கு மொண்சொல்லாள் - வீறியபொன் 366

சிவபெருமானது திருக்கரம் வெட்டினமையின், குயிலாலுண்டாகும் வருத்தத்தைப் போக்கிக்கொள்ளுதற்கு இவள் அதனைத் தரிசித்தாள்.

359. மன்மதனை எரித்ததுபற்றி நெற்றிக்கண்ணை வாழ்த்தினள்; 'காமப் பகையைடயர் கண்ணுளா' என்பர் பின்னும்; 458.

355 - 9. இக்கண்ணிகளுடன், "நெற்றிமீது கண்படைத்த வும்மை மாரனெய்வனே, நீரணிந்த வரவிருக்க நெடியதென்றன் முடுகுமோ, வெற்றியான தாளிருக்க மதிய மும்மை நலியுமோ, விரவுகங்கு லுமது கண்ணின் வெயிலின்முன்பு நிற்குமோ, கற்றையான குழலியெந்த வுதவி கொண்டு பகைவெலும், கருணைகூர்தெ னருணைமேவு கலியுகத்து மெய்யரே, செற்றலார்கள் புரமெரித்த புழகணிப்ர தாபரே, தேவராய ரேசுகந்த தினவசந்த ராயரே" (அருணைக். 51) என்னும் பாடல் ஒப்பிடற்பாலது.

360. பகைக்குப் பகையென்றது, 355-ஆம் கண்ணிமுதலியவற்றிற் கூறிய மாலைமுதலியவற்றின் பகையாகிய இறைவன் வலக்கண் முதலியவற்றை.

361. தேர் வேறு வீதியை அடைந்தது.

363. கூந்தலின் கருமைமிகுதியைக் கூறியபடி.

364 - 5. முந்நீர்க்கண்ணுள்ள நல்ல பவளம்.

366. உமிழ் - உமிழ்வாய்; ஏவல்.

மேருச் சிறுபந்தோ மென்கழங்கோ வென்னமிகப்
பாரித் தெழுந்த பயோதரத்தாள் - சீரித்து 367
வாய்ந்த விழையுரலோ வன்றூண மோவெனப்போய்த்
தேய்ந்து சிறுத்தொழியுஞ் சிற்றிடையாள் - ஆய்ந்தவையம் 368
எல்லாமோர் கையளவோ வில்லையோ வென்னவிண்மேல்
செல்லா மணிநிதம்பத் தேரினள் - வில்லேறும் 369
பஞ்சி பரலோ படுநெருஞ்சி யோவெனவுள்
அஞ்சிமுகஞ் சேக்கு மடியினள் - விஞ்சுபுகழ் 370
சேர்க்குந்தென் பூவைத் திசைபோல யாவரையும்
பார்க்குந் தொறுமயக்கும் பண்பினள் - கூர்க்கும் 371
அரிவைப் பருவத் தருட்பூவ ணேசன்
கருணைப் பவனிவரக் கண்ட - பரிசினல் 372
காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரு மயலினள் - சாலமணம் 373
தைவந்த காவிற் றனித்திருந்தோ ரோவநூல்
கைவந் தவனைக் கடிதழைத்து - மெய்வந்த 374
பூவண வாணனஞ்சொற் பொன்னனையாட் கன்றளித்த
மாவணக் காதை வகுத்தெழுதி - ஓவியத்திற் 375
காட்டு கெனநிறைபொன் கைக்கொடுப்ப வோர்படத்தில்
தீட்டி யவனவண்முன் சென்றிருந்து-தோட்டலர்மென் 376

---

367. கழங்கு - கழற்சிக்காய். சீரித்து - பரீக்ஷித்து; "வச்சிரஞ் சீரிப்பான்போற், பொய்தவன் தலையைக்கொய்தான்" (திருவிளை. 1 : 58)

368. இழை - நூலிழை.

370. பரல் - பருகைக்கல். சேக்கும் - சிவக்கும்.

371. பூவை - திருப்பூவணம்; இத்தலத்தில் திசைமயக்கமுண் டென்பதை, இந்நூல் 113-ஆம் கண்ணியாலும் அதன் குறிப்பாலும் அறியலாகும்; இக்கண்ணி, "தலைவிக்கைங், கோணம் பெறவகுத்த கோயில்போலியாவரையும், காணுந் தொறுமயக்குங் காட்சியாள்" (ஏகாம்பர. 361 - 2) என்பதைப் பின்பற்றி வந்தது.

373. இக்கண்ணி, "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்", (திருக்குறள், 1227) என்பதை உட்கொண்டது.

374. ஓவநூல் - சித்திரநூல். 375. ஓவியம் - சித்திரம்.

374 - 6. இக்கண்ணிகள், "ஓவியத் துறைகை போய வொருவனை யுருவின் மிக்க, காவல னெருவன் மற்றோர் கன்னிநீ தீட்டு கென்ன" (நைடதம், அன்னத்தைக். 6) என்பதை நினைப்பிக்கின்றன.

போதரசு கையாற்செய் பொன்னனையாய் பொன்னனையாள்
மாதரசு வாழ்பொன் மனையிதுபார் - கோதை 377

புலரியிற் போந்து புனல்வையை கைமேல்
பலனுய்க்க மூழ்கும் படிபார் - நலனுய்க்கும் 378

கண்மணி பூண்டுமனங் காமுறுவெண் ணீறணிந்து
பெண்மணியன் னுளிருக்கும் பெற்றிபார் - உண்மைத் 379

தபத்தியானப் பெண்ணரசு தாழ்விலெழுத் தஞ்சும்
செபத்தியானஞ் செய்யுஞ் செயல்பார் - சுபத்தியானம் 380

செய்து சிவனைத் திருவர்ச் சனைமுடித்துக்
கைகுவித்து மாதிருக்குங் காட்சிபார் - பெய்வளையாள் 381

ஆயத் தொடும்பூவை யங்கணனைச் சேவிக்கக்
கோயிற் புகுந்துநின்ற கொள்கைபார் - ஏயத் 382

திருத்தஞ்சி லோதி திருமுன்பு சுத்த
நிருத்தஞ்செய் கோல நிலைபார் - நிருத்தம் 383

புரிந்தங்கு நின்றரிதிற் போந்து மனைக்குட்
பரிந்தங் கிருக்கும் படிபார் - அருந்த 384

முருந்து நகைமனைக்குண் மொய்த்தீண்டிச் செல்லும்
திருந்துதிருத் தொண்டர் திரள்பார் - வருந்தங்கண் 385

நாய னடியாரை நண்ணி யெதிரிறைஞ்சித்
தூய வமுதருத்துந் தோற்றம்பார் - மேயசிவன் 386

தன்னுருவம் பொன்னுருவ மாகச் சமைக்கவிளங்
கன்னி சமைத்த கருவுருப்பார் - அன்னம் 387

தொடுத்த கருத்தறிந்து சுந்தரப்பே ரண்ணல்
எடுத்தசித்த வேடத் தெழில்பார் - வடித்தவயில் 388

ஒத்தவிழி மாளிகைமு னுற்றெருபால் யோகபட்டச்
சித்தரிறு மாந்திருக்குஞ் செய்கைபார் - அத்தகைமை 389

---

377 - 8. போதரசு - பிரமதேவர். புலரி - விடியற்காலம்.

383. திருத்து அம் சில் ஓதி - திருத்திய அழகிய சிலவான கூந்தலையுடையாள். திருமுன்பு - சந்நிதியில். சுத்தநிருத்தம் சொக்கமென்றும் வழங்கப்படும்; சிலப்பதிகாரம் பார்க்க.

385 - 6. முருந்துநகை - பொன்னனையாளுடைய. நாயன் - தலைவர்.

387. திருவுருச்சமைத்தற்குக் கம்மியர்களைக்கொண்டு பிடிப்பித்த கரு. 388. சுந்தரப்பேரண்ணல் - சோமசுந்தரக்கடவுள். அயில் - வேல்.

கண்டெதிர் சென்றுமலர்க் கால்பணிந்தன் பென்னுமயல்
கொண்டெதிர் நிற்குமவள் கொள்கைபார் - வண்டுளரும் 390

நெய்ய குழல்வருந்து நின்கருத்தே தென்றெங்கள்
அய்யர் முறுவ லரும்புதல்பார் - தையலரி 391

காணாத் திருவுருவங் காணுங் கருத்தரவப்
பூணார்க் குரைக்கும் புதுமைபார் - நீணாகச் 392

சித்த ருரைப்படியத் தேமொழியில் லிற்கரும்பொன்
அத்தனையு முன்புவைத்த வார்வம்பார் - வைத்ததன்மேல் 393

நீற்றைச் சிதறியையர் நேரிழைநீ யித்தையெரி
ஏற்றம் பசும்பொன்னா மென்பதுபார் - கோற்றொடியும் 394

கட்டுசடைச் சித்தர் கருதுமுறை யேயெரிபெய்
தட்டகரும் பொன்செம்பொ னானதுபார் - வட்டமுலைக் 395

கொம்பனாள் பூவணத்தெங் கோமானை யாணிதீர்
செம்பொனாற் கண்ட திருவுருப்பார் - விம்பவாய் 396

வள்ளிமுத்தங் கொள்ளா மகப்பெற்றோன் மேனியைக்கண்
டள்ளிமுத்தங் கொள்ளுமவ ளன்புபார் - வெள்ளிவெற்பன் 397

அன்புக் கிளகியவ ளங்கை நகரேகை
தன்பொற் கபோலந் தரித்ததுபார் - வன்பிற் 398

பிடித்த விரதப் பெறும்பேறு பாவைக்
கடுத்த விசேட மதுபார் - முடித்தகுழல் 399

மாதேயென் றோவநூல் வந்தோன் வகுத்துரைக்கும்
போதே விரகம் புறம்பொசியக் - காதார் 400

---

391. நெய்யகுழல்-நெய்ப்புற்ற கூந்தலையுடையாய். அரி-திருமால்.
392. கருத்து - கருத்தினை. அரவப்பூண் - பாம்பாகிய ஆபரணம்.
393. கரும்பொன் - இரும்பு. 396. விம்பம் - கொவ்வைக்கனி.
397. வள்ளி - வள்ளிநாயகியார். மக - முருகக்கடவுள்.

377 - 99. பொன்னனையாளுடைய நித்தியநியமங்களை முறையே சித்திரத்திற் காட்டுவதாகவுள்ள இக்கண்ணிகள், “மகிழ்வுற்ற வாயமுடன் வண்டரள மாலை, திகழ்சித்ர மண்டபத்திற் சேர்ந்து-மகர, விடந்தோய் விழியங் கெழுதியவை யெல்லாம், நெடும்போது பார்த்தகலா நிற்ப - அடைந்தெவரு, மின்ன திதுவிதுவென் றெங்களுக்குக் காட்டியருள், அன்ன நடையாயடைவிலென - மின்னிடையீர், வெள்ளி மலைநீங்கி விண்ணோரு மண்ணோரும், உள்ளும்பிரானை யுமையாள் போய் - உள்ளமிகத், தாங்காத பூசைக்குத் தக்கவிட மீதென்று, நீங்காது நின்ற நிலைபாரீர் - தேங்கமழும், காவி புடை சூழ்ந்த கம்பா நதிப்புனலில், பாவை படியும் படிபாரீர் - கோவையிதழ், ஓசையளிக

குழையாள் குழைந்தறிவு கொள்ளைபோய் நெஞ்சம்
தழையாமை நின்று சருகாம் - பொழுதில் 401
திளைத்தவுமை யம்மை திருக்கையால் வைத்து
வளர்த்த தருநிழலில் வாழ்வோன் - கிளைத்துமனப் 402
பத்தி மலரவந்நாட் பானு வழிபட்டோன்
அத்தி மலர வருள்செய்தோன் - முத்தி 403
மலரமலர் புட்ப வனத்தான் பவங்கள்
புலரவருந் தேவி புரத்தான் - குலவு 404
நளச்சக்ர வர்த்திகலி நாசஞ்செய் நாதன்
இளச்சக்ர வர்த்திபணி யெம்மான் -வளைச்சக்ர 405

ளூலவம்பி காவனத்தில், வாசமலர் கொய்யும் வகைபாரீர் - பேசரிய, ஆதி யமர ரறியா வவராக, மாது குவித்த மணல்பாரீர் - கோதை, அணியு மிருளோதி யன்பொடுபூ சித்துப், பணியும் வழிபாடு பாரீர் - இணையிலிமுன், மேவு புளகமுடன் வெண்ணீறு மெய்க்கணிந்து, தேவி யிருந்த செயல் பாரீர்-பூவிற், கரந்து மழைபொழியாக் காலத்தே கம்பை, பரந்து வரு பெருக்கைப் பாரீர் - விரிந்தபுனல், மாகம் புதைய வரப்பண்ணித் தம்மை யொளித், தேகம்பர் நின்ற விடம்பாரீர் - தோகை, அரும்புனல்கண் டஞ்சியவ ராகமுறச் சென்று, பரிந்து தழுவியதுபாரீர் - புரிந்து, மலைக்கு மகடன் வழிபாடு வந்து, பலித்த பெறும்பேறு பாரீர் - கலப்பொற், றெரிவை யுடனிந்தத் தேமா நிழலிற், பரம னிருந்தவிடம் பாரீர் - பொருவில், திருக்கைவளை யான் முலையாற் றிண்டோளு மார்பும், பரித்த திருத் தழும்பு பாரீர் - விரித்தசடை, யண்ணல் வெளிப்பட்டருள்வரங்கள் பாரீரென், றெண்ணும் புதுமை யிவையெல்லாம் - ஒண்ணுதலாள் காட்ட'' (ஏகாம்பர. 363 - 80) என்னும் பகுதிகளோடு ஒப்பு நோக்கத் தக்கவை.

401. 'குழையாள் குழைந்து' என்பது சொல் முரண்.

402. இந்நூல் 26 - 9 ஆம் கண்ணிகளின் குறிப்பைப்பார்க்க.

403. இறந்த தன்னுடைய பிதாவின் என்புகளைக் கங்காநதியிலிடுவதற்கு அவற்றை ஒருகுடத்திலடைத்து வைத்துக்கொண்டு செல்லும் தருமஞ்ஞனென்னும் அந்தணனொருவன் இத்தலம் வந்து மணிகர்ணிகையின் கரையில் இருக்கையில் அவ்வென்புகள் தாமரைமலரும் நீலோற்பல மலருமாயினவென்பர்; இதனை, இத்தலபுராணத்தில், தருமஞ்ஞன் முத்திபெற்றசருக்கத்தாலறிந்து கொள்க. அத்திமலரவென்பதற்குப் பூவாத அத்திமரம் மலரவென்பது மற்றொருபொருள்.

403 - 4. இந்தவனத்தில் முத்தி யென்னுமலர் மலர்கின்றது. தேவி புரமென்பது இத்தலத்திற்கு உரிய திருநாமங்களுள் ஒன்று.

405. நளச்சக்கரவர்த்திக்குக் கலியின் துன்பம் இத்தலத்தில் நீங்கியது. இளனென்னுமரசன், தன்பால்வந்த ஆடவர்களை மகளிர்களாகச் செய்யும் இயல்பையுடைய வனமொன்றிற்புகுந்து பெண்வடிவமுற்றப் பின் சில முனிவர்களுடைய கட்டளைப்படி அசுவமேதத்தாற் சிவபெருமானை உபாசித்து அவ்வடிவம் நீங்கப்பெற்றமையின், 'இளச்சக்கர வர்த்திபணி யெம்மான்' என்றார்; இதனை, இராமாயணம், உத்தர காண்டத்தாலுணர்க.

நீளத்தான் காணாத நீளத்தான் றேவிபுகல்
தாளத்தான் சங்கார தாண்டவத்தான்-கேளொத்தான் 406
பூவணத்தெங் கோமான் பொலந்தேர் மறுகணைய
ஏவணக்கண் மின்கேட் டெதிர்சென்றாள்-தீவணத்தன் 407
தெய்வத் திருமேனிச் செஞ்சோ தியுமுகமும்
கைவைத்த வீரமழுக் காட்சியும் - உய்வித்த 408
காவித் திருநீல கண்டமுங் கொன்றையந்தார்
மேவிப் பரிமளிக்கு மெய்ப்புயமும் - தாவிப் 409
பொழியுங் கருணைப் புனிதநதி பொங்கி
வழியுந் திருக்கண் மலரு - மொழிமறைப் 410
பண்மணக்குஞ் சீதப் பவளத் திருவாயும்
விண்மணக்குங் கங்கை விரிசடையும்-பெண்மணக்கும் 411
செம்பாதி யும்போய்த் தெரிசித்தாண் மார்பிருக்கும்
வம்பார் முலைத்தழும்பை வாழ்த்தினாள்-மொய்ம்பேறும் 412
சீல வளைத்தழும்பின் சீர்புகழ்ந்து பொன்னனையாள்
கோல நகக்குறியைக் கும்பிட்டாள் - நீலமிடற் 413
றெந்தையை நோக்கி யிதழித் திருப்புயத்தால்
வந்த விரகநோய் மாற்றுதற்குச் - சொந்த 414
மருந்தறியீர் வேளூர் வயித்தியரென் றாங்கே
இருந்தபரி சென்னோ வியம்பீர் - திருந்துகையில் 415
நிற்குந் தொகைவளையை நீர்கொண் டீர் கூடலிலே
விற்குந் தொழின்மறந்து விட்டீரோ - நற்கள் 416
வழியுமலர்க் கொன்றைதர மாட்டீர்க்கா ரூரின்
மொழியும் பெயரென் மோழியீர் - பழியஞ்சும் 417

---

406. நீளத்தான் - திருமால். தேவி புகல் தாளத்தான் - அம்பிகை விரும்பிக்கொட்டுகின்ற தாளத்தையுடையவர்; "தாளவட்டங் கொட்டு கைப்பாணி யொப்பவொரு சப்பாணி கொட்டியருளே" (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சப்பாணி. 1)

407. ஏவண்ணக்கண் - அம்பின் இயல்பையுடைய கண். மின் - தெரிவை. 410. மலர் நதியைப் பொழிகின்றதென்றது ஒருவியப்பு.

412 - 3. முலைத்தழும்பும் வளைத்தழும்பும் காஞ்சிபுரத்தில் அம்பிகை பூசித்தபொழுது உண்டானவை. வம்பு - கச்சு. மொய்ம்பு - தோள்.

415. வேளூர்-வைத்தீசுவரன் கோயில். வைத்தியர்-வைத்தியநாதர்.

416. விற்குந்தொழில் - வளையல் விற்குந்தொழில்.

417. ஆரூரில் மொழியும்பெயர் - தியாகராசரென்னும் திருநாமம்.

ஆட றவிர வறுபத்து மூன்றேமுன்
கூட னகராடல் கூறுவீர் - ஓடுகண்ணீர் 418
ஊற்றை மறிக்க வுபாயமறி யீர்வையை
ஆற்றை மறிக்க வறிவீரோ - சாற்றீரென் 419
றன்னமுரைத் தாளரனு ராகத் தழகியமின் [420
தன்னை நினைத் தஞ்சினர் தார்கொடுக்கப் - பின்னை மதன்
காவி யொழிந்த கணைகிடக்குந் தூணியெனப்
பாவைகிடந் தாணடந்தான் பைந்தாரான் - பூவை 421
உரிய வுடற்குயிருண் டென்ன வுயிர்த்து
நிரைவளையார்க் கையத்தை நீத்தாள் - தெரிவைக் 422

பேரிளம்பெண்

கடுத்த பருவ மலர்வே ளிரதி
எடுத்தனைய ளாம்பே ரிளம்பெண் - தொடுத்தமதன் 423
நீலவம் பொன்றொழிய நின்றநா லம்புசெயும்
சீலமுங்கண் டெவ்வெவர்க்குஞ் செப்புவாள் - சால 424
வினை நீடு மன்மதவேள் வேதாந்த சாரத்
தனுபோக முற்று மறிந்தாள் - தனிமூவர் 425
கானத் திருமுறையைக் கைவிடாள் பண்ணேடும்
பானற் பெருவிழியாள் பாடுவாள் - ஆனையுரித்
தாரைச் சயிக்கவிரண் டானை தலைகீழாப் 426
பாரப் பெருந்தவஞ்செய் பான்மைபோல் - வாரென் 427
முகபடா நீக்கி முனிந்தா டவர்மேல்
இகலிக் கிரிவீ ழிபம்போல் - அகமகிழ 428
உந்தி மடுவென் றுரைக்கு மதுபார்க்க
வந்த துணைச்சக்ர வாளம்போல் - முந்தத் 429

---

417 - 8. பழியஞ்சும் ஆடல் - பழியஞ்சின திருவிளையாடல்.

419. ஆற்றைமறித்தது, பிட்டுக்கு மண்சுமந்ததிருவிளையாடலில்.

421. காவியொழிந்தகணை - தாமரைமலர் முதலிய நான்கு. பைந்தாரன் - மன்மதன்.

424. கொலைப்பாண மாதலின், நீலமலராகிய அம்பு விலக்கப்பட்டது.

426. திருமுறை - அடங்கன்முறை. 427. வார் - கச்சு.

428. முனிந்து - கோபித்து.

திருப்பனந் தாளிலிங்கந் *திண்கலேச்சிக் காக [430
விருப்பினுடன் சாய்ந்த விதம்போல் - பருப்பதம்போல்
இன்னம் பருக்கி லிடைதாங்குந் தாங்காதென்
றுன்னி யதுபார்க்க வுற்றதுபோல் - தன்னேவிழை 431
மாந்தருக்கு மோக மகோததியைக் கையணைத்து
நீந்தக் கவிழ்த்தகுட நீர்மைபோல் - நேர்ந்திட் 432
டெதிர்த்துவரு வாரையெல்லா மியாஞ்சயித்தோ மென்ன
மதித்தலுத்துச் சாய்ந்த வகைபோல்-கதித்திடத்திண் 433
கோல்பிடித்த செங்கைக் குடைபோற் றலேகீழா
மால்பிடிக்க நின்ற மணிவரைபோல் - சால்பகல 434
மட்டுண் டடங்காது வம்பிற் றலேயிட்டு
முட்டுண்டு பின்குனியு மூர்க்கர்போல் - கிட்டும் 435
வளநீல ரோம மணிக்கயிறு பூட்டி
இளநீ ரிறக்கு மியல்போல் - இளேஞோரால் 436
ஆடி விசையோய்ந் தயர்ந்துவீழ் பம்பரம்போல்
கோடி முகங்கவிழ்ந்த கொங்கையாள் - நீடுலகில் 437

---

430. சிவநேசம்பூண்ட தாடகையென்னு மங்கையொருத்தி திருப்பனந்தாளிற் சிவலிங்கப்பெருமானே நாள்தோறும் பூசித்துக்கொண்டு வருகையில், ஒருதினம் சாத்துதற்காகப் பூமாலேயை இரண்டுகையாலு மெடுத்தபொழுது, கட்டுக்குலேந்து அவளாடை நழுவத்தொடங்கியது; முழங்கையால் அவ்வாடையை இடுக்கிக்கொண்டு மாலேசாத்துதற்கு முடியாமல் அவள் மிக வருத்தமுற்றனள்; அப்பொழுது அவ்வருத்தம் பொருமல் அவளன்புக்கிரங்கிச் சிவபெருமான் தமது திருமுடியை வளேத்து அம்மாலேயை ஏற்றுக்கொண்டருளின ரன்பது அத்தலபுராண கதை. கலேயாற் சிறப்பெய்தியதுபற்றி, கலேச்சியென்பது மேற்கூறிய தாடகைக்குப் பெயராயிற்றென்பர்; "சிலேச்சிக்கு மதனெரிய விழி திறந்த திருப்பனந்தாட் சிவனே மாய, வலேச்சிக்கு விட நினேயே னும்மையுநான் வயப்படுத்தமாட்டே னந்தோ, குலேச்சிக்கோ ரன்னமின் னுங் காணுத சடைமௌலி குலேந்துபோன, கலேச்சிக்கு வளேந்ததுவுங் கலேயனுக்கு நிமிர்ந்தததுவுங் கண்டுந் தானே" என்னும் பழைய பாட்டில் இவ்வரலாறும் கலேச்சியென்னும் பெயரும் அமைந்திருக்கும் அழகைப்பார்க்க. கலேச்சியென்னும் பெயர் வழக்க முண்மை இப்பாடலாலும் தெரிகின்றது.

431. அது - அந்தஇடையை.

434. மால் - கண்ணன். மணிவரை - கோவர்த்தனகிரி.

435. மட்டு - எல்லே, நறுமணம். வம்பு - வீண்செயல், கச்சு.

436. உரோமாவலியாகிய மணிக்கயிறு.

---

* 'திண்கலேச்சிக்கற்கா' என்னும் பாடம்.

திக்கு விசயஞ் செலுத்தி மதனுவம்
புக்க விசிகம் புரைகண்ணுள் - மிக்குலகம் 438
நாடுந் திருமா னடனத்தி னுற்றுகைப்புண்
டாடும் படம்போலு மல்குலாள் - கூடிய 439
மேல்வீசு நள்ளிருளின் மேனிதெரி யாதுநிலாக்
கால்வீசும் போதுதெரி காருடல்போல் - நான்மாடச் 440
செய்யநகர் வேந்தாற் சிறையிற்சின் னுள்கிடந்து
மெய்யிளைத்து மீண்டுவரு மேகம்போல் - சைய 441
மடந்தை மணவாளன் வாழ்சேதுக் கைதை
குடைந்துவரு வண்டின் குழாம்போல் - மிடைந்துமலர் 442
மாலைமரு வாததினுன் மாமலர் பூத்துதிர்ந்த
சோலையது போலுஞ் சுரிகுழலாள் - சாலமைக்கு 443
மேவு மகத்தொழிய வெண்டரள மேலிலையென்
ருவலுறத் தோட்கணியா வாரத்தாள் - பூவணத்தெம் 444
புத்தமுத வாரியின்மேற் பொன்னனையாள் வைத்தபரி
வத்தனையும் வைக்கு மளவினுள் - மெத்தநிலை 445
ஓங்கு மணிமாடத் துள்ளோ ரரியணையில்
பூங்கவரி கால்வீசப் போயிருந்து - பாங்குறையும் 446
முற்பருவப் பெண்கட்கு மோகநூ லவ்வவர்தம்
சொற்பருவங் கண்டுகண்டு சொல்லுங்கால் பொற்பிற் 447
சிலர்கேட்கப் பாடஞ் சிலர்கேட்க வர்த்தம்
சிலர்கேட்கச் சங்கை தெளிவித் - துலகேழின் 448
மன்மதனூல் கைவந்தோர் மற்றிலையென் ருசிரியத்
தன்மை செலுத்துந் தறுவாயில் - தொன்மை 449

---

438. ஆவம் - அம்பருத்தூணி. விசிகம் - அம்பு.
439. திருமால் - கண்ணபிரான். காளிங்கனென்னும் பாம்பின் படம்.
441 - 2. வேந்து - உக்கிரபாண்டியன். சையம் - மலை. கைதை - தாழம்பூ.
443. அமைக்கு - மூங்கிலுக்கு. 444. அகம் - உள்ளிடம்.
447. மோகநூல் - காமநூல்; 'மன்மதநூல்' என்பர்பின்; 449.
449. கைவந்தோர் - தேர்ச்சியுற்றோர். தறுவாய் - சமயம்.
450. அருணைக். 4; தாயுமானவர். எங்கு நிறை. 1.

அவனசை யாம லணுவசையா தென்னும்
புவனப் பழமொழிக்குப் புத்தேள் - உவமை 450
தெரிக்குந்தெய் வங்கள் சிகாமணி தோன்றி
மரிக்குந்தெய் வங்கண் மணாளன் - பரிக்கும் 451
அயனுக்கு மிந்திரற்கு மங்கேழ் முளரி
நயனற்குந் தேவர்க்கு நாயன் - பயனுக்கும் 452
வையைநதித் தீரன் மணிகர் ணிகைத்தீர்த்தன்
சைவநிறை புட்பவனத் தம்பிரான் - தெய்வமறை 453
யார்ப்பவனி யெங்கு மதிரக் கறங்குதிருத்
தேர்ப்பவனி வீதிவரல் செப்பினார் - போர்ப்பவனி 454
சென்றிளைஞ ராவி செகுத்துண்ணுங் கண்ணார்க்கு
மன்றவுரை செய்நூன் மறந்தெழுந்தாள் - முன்றில் 455
கடந்தா டிருவீதி கண்டாடேர் முன்னே
நடந்தாள் சிவனை நயந்தாள் - தடந்தேரை 456
ஓடாமை வேண்டி யொருகோடி தண்டனிட்டாள்
நீடா தரங்கூர நேர்நின்றாள் - வீடாத 457
நாமக் கயிலைமலை நாதா புராதனா
காமப் பகையையடர் கண்ணாளா - வாமக் 458
கவுரி திருக்கணவா கங்கைமண வாளா
பவன கவனவிடைப் பாகா - உவமையில்பொற் 459
கச்சேற்ற கொம்மைமுலைக் கன்னியரை வீதியிலே
பிச்சேற்ற வந்த பெருமானே - மைச்சேற்கட் 460
பாவணங் கோசைபயில் பாண்டிப் பழம்பதியாம்
பூவணங் கோயில்கொண்ட புண்ணியா - மேவநினைந் 461

---

451. மணாளன் - தலைவன்; 'தோன்றி மரிக்குந்தெய் வங்கண்மணாளன்' என்பது, "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கண்மணவாள" (முத்துக். செங்கீரை. 1 - 5) என்பதைத்தழுவியது.

454. ஆர்ப்பு அவனி எங்கும் அதிர.

455. மன்ற - தெளிவாக. 457. வீடாத - அழியாத.

458. நாமம் - மிக்கபுகழ். காமப்பகையை - காமனாகியபகையை.

459. பவன கவனம் - காற்றைப்போன்ற வேகம்.

460. பிச்சேற்ற - பித்தேற்ற; "பேராளன் றென்னன்பெருந்துறையான் பிச்சேற்றி" என்பது திருவாசகம், திருவம்மானை, 2.

461. பா அணங்கு - கலைமகள்.

தானாத மாலை யடுத்துமட லேந்தினேன்
தேனார்வா யூறநின்று தேங்கினேன் - ஆனாத 462
வண்டு விழக்கண்ணீர் மல்கினேன் பொன்பூத்தேன்
விண்டலர் தூற்ற வெளிநின்றேன் - மண்டி 463
வருமார்வத் துற்றேன் மலர்க்கொன்றை யானேன்
திருமார்வத் துற்றணையச் செய்துன் - அருடாராய் 464
என்றாளை நோக்கி யிடர்நோக்கிச் சம்பரனை
வென்றானை யீசன் விலக்கினான் - நின்றாளப் 465
பேதை முதலாகப் பேரிளம் பெணீறாக
மாதர் பலர்மயங்க மாதேவன் - சோதிப் 466
படர்வார் சடையெம் பரம்பர னென்றும்
அடைவார் வினைதீர்க்கு மம்மான் - அடியார் 467
குழாமருச் சந்நிதியெங் கோமா னதிரும்
முழாவருக் கோயின் முதல்வன் - விழாவருத் 468
தேருடையா னெங்க டிருப்பூ வணக்காசி
ஊருடையான் போந்தா னுலா. 469

திருப்பூவணநாதருலா முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

462 - 4. சிலேடை : தேங்குதல் - நிறைதல், நிலைகுலைதல். வண்டு- வண்டுகள், வளையல்கள். கண்ணீர் - கள் நீர், விழிநீர். பொன்பூத்தல் - பொன்னிறத்ததாகப் பூத்தல், பசலைநிறமடைதல். அலர் - மலர், பலர் கூறும் பழிமொழி. வரும் மார்பம், வரும் ஆர்வம்; மார்பமென்பது மார்வ மென்றும் வழங்கும் ; "புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால் பூண்ட கயற் கண்ணியுஞ்செவ் விதழி யேமால், வியந்து சொலி னன்ன தும்பொன்னிறமே யெங்கண் மின்னிறமும் பொன்னிறமே புயம்பெருமல் அயர்ந்திவள் வாடத்தகுமோ வருட்கண்பாரீ ரருணகிரிப் பெரியீரே யமல ரேநல், வயந்த விழா வழகரே நினைக்க முத்தி வரந்தருவா ரேமலைமேன் மருந்தனாரே" (அருணைக். 14) என்ற அருமைச் செய்யுளிலும் இப் படியேவேறொரு வகையாகக் கொன்றையைத் தலைவிக்கு உவமை கூறி யிருத்தல் காண்க.

465. சம்பரனை வென்றானை - சம்பராசுரனைச் சயித்த மன்மதனை; "சம்பரனுக் கொருபகைவா" (கந்த. காமதகன. 99)

அழகியநாயகர் துதி

தன்னனையார் தந்தையார் தமராரென் றறியாமற் றனித்தவுன்னைப், பொன்னனையார் வயிற்கருவிப் புகுந்த தனுன் முத்தமிட்டுப் புதல்வன்போல, மின்னனையா ரிடம் பிரியா மணவாள னெனப்புரிந்த விதத்தாலன்றோ, என்ன னையார் களுந்தரிசித் தேத்தினர் பூவணத்துறைந்தா யெளிதிற்றுனே.

O-,14LKY,T
N56

சிறப்புப்பாயிரம்

திருவால வாயரெலாம் வலசித்த ரிரதவா தஞ்செய் தற்கா, வருவாரை வணங்கவவர் மணிமுறுவல் சிறிதரும்பி மலர்க்கணேக்கக், கருவாகிப் பொன்னனையாள் பெற் றெடுத்த புத்திரனேர் கந்த சாமி, பெருவாய்மைப் பூவை யுலாப் பாடியதெம் போலியர்கள் பிழைக்கத் தானே.

[இந்த இரண்டும் பழைய செய்யுட்கள்]

மணிமந்திர விநாயகர் துணை

78617

அழகியநாயகர் துதி

தன் அன்னையார். வயின் - இடம், வயிறு. கரு - திருவுருவம்வார்த் தற்குக்கட்டிய கரு, கருப்பம்.

சிறப்புப் பாயிரம்

'பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனேர் கந்தசாமி' என்றது இந்நூலாசிரியர் ஓர் உருத்திரகணிகையின் புதல்வரென்பதைக் குறிப் பிக்கின்றது.

Kabeer Printing Works, Madras (3206)

4A
7-90

விலைக்குக் கிடைக்கும்
வேறு உலாக்கள்

		ரூ.	அ.
திருக்காளத்திநாதருலா	...	0	5
தேவை (இராமேசுவர) உலா	...	0	4
மதுரைச் சொக்கநாதருலா	...	0	6
சங்கரலிங்க உலா	...	0	10
திரு இலஞ்சி முருகனுலா	...	0	5
திருக்கழுக்குன்றத்து உலா	...	0	8
கடம்பர் கோயில் உலா	...	0	6

தியாகராச விலாசம்
53, பிள்ளையார் கோயில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி :: சென்னை-5